Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
※ பல் கட்டுவதற்கும்,
※ பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
※ இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)
(சி-892)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 28 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 08 (11.05.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 219



நேற்றுமுன்தினம் நள்ளிரவுவேளைமுதல் அரசாங்கத்தினால் மூடப்பட்டுக்கிடக்கும் அரச அச்சகக் கூட்டுத்தாபனத்துக்கு முன்னால் பொலிஸார் பாதுகாப்பில்.

### தேசிய லொத்தர் சபையை பொறுப்பேற்ற

# ஜனாதிபதியின் நடவடிக்கையை எதிர்க்க அமைச்சரவை முடிவு!

அபிவிருத்தி லொத்தர் சபையை, ஜனாதிபதி தமது பொறுப்பில் எடுத்துக்கொண்டமைக்கு எதிராக, கூட்டு நடவடிக்கை எடுப்பதென, அமைச்சரவை தீர்மானித்துள்ளது. அலரிமாளிகையில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றை அடுத்தே, அமைச்சர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்தனர்.

நாடாளுமன்றத்துக்கும், நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிக்குமிடையே நேரடியான மோதலே இந்த நடவடிக்கை என்று அவர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் நடவடிக்கையால் நாடு சீர்குலைந்து, சமாதான முயற்சிகளும் தடம்புரளக்கூடும் என்றும் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் எச்சரித்துள்ளனர்.

இதனால், அடுத்த மாதம் நடைபெறவுள்ள ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் எதிர்பார்க்கப்படும் சர்வதேச உதவியும் இல்லாமற்போகலாம் என்றும் அமைச்சர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்பது என்ற தீர்மானம், நடைமுறைப்படுத்தப்பட முடியாத சூழ்நிலை கொழும்பில் உருவாகி வருவதாகவும் இன்னுமொரு (10 ஆம் பக்கம் பார்க்க)

### உயர் பாதுகாப்பு வலய நம்பியாரின் அறிக்கை

# ஊடகச் செய்திகளை வைத்து கருத்துக்கூற புலிகள் மறுப்பு!

## உத்தியோகபூர்வ கையளிப்பு இன்னுமில்லை

(கிளிநொச்சி)

உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான இந்திய இராணுவ முன்னாள் உயரதிகாரி ஜெனரல் சதீஷ் நம்பியாரின் அறிக்கை இன்னமும் உத்தியோகபூர்வமாகக் கிடைக்கவில்லை. இந்தநிலையில் அதுகுறித்து கருத்துத் தெரிவிக்கமுடியாது என, விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இந்த அறிக்கை குறித்து ஊடகங்களில் மட்டுமே தகவல் வெளியாகியுள்ள நிலையில், அதை ஆதாரமாக வைத்து விடுதலைப் புலிகள் கருத்துக்கூற விரும்பவில்லையென அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

### இராணுவப் புலனாய்வில் தொழில்சார் தகைமை பற்றாக்குறையாம்!

இராணுவத்திற்குத் தகவல் வழங்கிவந்த புலனாய்வாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டு வந்தமைக்கு - இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு, அவர்களை தொழில்சார் தகைமையற்ற ரீதியில் பயன்படுத்திவந்ததே காரணமென, சிரேஷ்ட இராணுவப்புலனாய்வு உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு அவர் தெரிவிக்கும்போது,

இராணுவப் புலனாய்வுச்சேவை (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



தென்னிலங்கையில் இனி, அம்மா - ஐயா சச்சரவில நாள் போகுமெண்டுங்கோ...!

## சதீஷ் நம்பியாரின் அறிக்கையை அரசு-புலிகள் ஆராய வேண்டும்

### மாவை சேனாதிராஜா எம்.பி. தெரிவிப்பு

சதீஷ் நம்பியாரின் அறிக்கை நடைமுறைச் சாத்தியமாகுமா? என்பதை, சம்பந்தப்பட்ட தரப்புகளே ஆராய்ந்து முடிவுக்கு வரவேண்டும் என - கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்தார்.

சதீஷ் நம்பியாரின் உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான ஆலோசனை அறிக்கை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே, மாவை சேனாதிராஜா இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், சதீஷ் நம்பியார் யாழ்ப்பாணத்துக்கு முன்பு விஜயம் செய்தபோது - உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீள்குடியமர்த்துவது பற்றி கருத்திற் (10 ஆம் பக்கம் பார்க்க)

### திருகோணமலை இறால்குழியில்

## அதிகாரிகள் பயிற்சி முடித்து 45 போராளிகள் வெளிவந்தனர்

### கேணல் பதுமன் சான்றிதழ்களை வழங்கினார்

(திருகோணமலை)

திருமலை இறால்குழிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் இளநிலை அதிகாரிகளுக்கான பயிற்சியை முடித்துக்கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று நடைபெற்றது.

பயிற்சியை நிறைவுசெய்து வெளியேறிய விடுதலைப் புலிகளுக்கு, திருமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் பதுமன் சான்றிதழ்களை வழங்கினார்.

இளந்தலைவர்கள் 28 பேரும், சுரேஷ் பதுங்கித்தாக்கும் படையணியைச் சேர்ந்த 8 வீரர்களும், மோட்டார் தாக்குதல் படையணியைச் சேர்ந்த 10 பேருமாக மொத்தம் 45 போராளிகள் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறியுள்ளனர்.

இவ்வைபவத்தினைக் கண்டுகளிக்கவந்த நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களுக்கு, இறால்குழிக்கு அப்பாலிருந்து பச்சனூர்வரை முஸ்லிம் பகுதிகளூடாக இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கிவந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (04)

### ரோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்ளும்

## இறுதி முடிவினை அறிவிக்க ஜப்பானிய அரசு காலக்கெடு!

ரோக்கியோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்வது பற்றி எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் இரு தரப்பும் தமது முடிவை அறிவிக்க வேண்டும் என்று ஜப்பான் கேட்டுள்ளது.

விசேட சமாதானத் தூதுவர் யசுசி அகாஷி மூலம், மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் இந்தத் தகவலை விடுதலைப் புலிகளின் தலைமையிடமும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடமும் தெரிவித்துள்ளனர்.

ரோக்கியோ மாநாடு தொடர்பாக, மே 7 ஆம் திகதி அகாஷி கலந்துரையாடினார். இதன்பின் ஒருவார கால அவகாசம் இருதரப்புக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

இது பாரிய மாநாடு என்பதால், அதனை ரத்துச்செய்யவோ அல்லது ஒத்திவைக்கவோ முடியாது எனவும், உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ள ஜப்பான் அறிவித்துள்ளது.

# வஞ்சம் தீர்க்கும் நடவடிக்கையாக சதீஷ் நம்பியாரின் அறிக்கை உள்ளது

## வவுனியா வெகுசன ஒன்றியம் பிரதமருக்கு கடிதம்

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் இவ்வேளையில், இந்தியாவின் முன்னாள் இராணுவ உயரதிகாரி ஜெனரல் சதீஷ் நம்பியாரின் ஆலோசனை அறிக்கை - சமாதானத்துக்கும், மீள்குடியேற்றத்துக்கும் பெரும் குந்தகம் விளைவிப்பதாக அமைந்துள்ளது என, வவுனியா மாவட்ட வெகுசன ஒன்றியம் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் -

எமது சமாதான முயற்சிகளில் எவ்வகையிலும் பங்களிப்புச் செய்யமுடியாத இந்திய நாட்டுப் பிரஜையும், ஏற்கனவே இலங்கையில் ஓர் இராணுவ நடவடிக்கையினை மேற்கொண்டு, எவ்வித வெற்றியையும் காண முடியாமல் திரும்பிச்சென்ற (10 ஆம் பக்கம் பார்க்க)

Expo Aviation (Pvt) Ltd.
EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290 (சி.913 )

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நக்கா வீதி, டொண் பொஸ்கோவிற்கு அருகாமையில் ஆலடிச் சந்தியில் - கடைகள், வீடுகள் கட்டக் கூடிய 51/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
தொலைபேசி:- 0777 - 118367
இல 09, நக்கா வீதி, யாழ்ப்பாணம். (339)

## VACANCIES

Excellent opportunities for young people with good educational background and desire to excel in their chosen Careers in an Organization established as the Market leader in office Automation, Communication and IT.

### Marketing Assistants

Candidates should have sucessfully Completed G.C.E (Advanced Level) and should have credit passes in English, Mathematics or Science subjects. Good Communication skills and IT literacy are required.

Candidates enrolled in any recognized Courses in marketing will be an added qualification, will be initilly recruited as trainees prior to permanent employment being offered subject to meeting desired performance levels.

### Technicians

Candidates should have sucessfully qualified in the G.C.E (Advanced Level) and have part qualifications in city & Guilds (U.K) or it's equivalent. Technical skills on IT will be an essential requisite and experience in similar or related industry will be an added qualification.

Attractive terms will be offered to the right candidates please apply by Wednesday 21st May 2003.

**To:**
**Personnel Manager,**
**metropolitan office (pvt) Ltd,**
**85, Braybrooke place,**
**Colombo.** (C/919)

or handover your application to:
**Mr. Sriharan**
**C/o- m/s Navahala,**
**200, k.k.s Road,**
**Jaffna.**

## சங்கானையில் பஜனை ஊர்தி

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு, சங்கானை தெற்கு கிராம மக்களின் எழுச்சி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை இந்து சமய விவகார அமைச்சின் அனுசரணையுடன் நடைபெறுகிறது.

இன்றைய நிகழ்வில், சங்கானை மாவடி ஞானவைரவர் தேவஸ்தான பரிபாலன சபையின் அனுசரனையுடன்- சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றமும், மகளிர் மன்றமும் இணைந்து நடாத்தும் பஜனை ஊர்திப் பவனி, காலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

### விசேட அபிஷேக ஆராதனை

உலக இந்து மாநாட்டையொட்டி, திருநெல்வேலி பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் இன்று விசேட அபிஷேக ஆராதனைகளும், சமய சொற்பொழிவுகளும் இடம் பெறவுள்ளன.

### திருத்தி வாசிக்கவும்

நேற்றைய பதிப்பில் உலக இந்து மாநாட்டுப் படத்தில் உரையாற்றியவரின் பெயர் பேராசிரியர் சுந்தரமூர்த்தி என்பதற்குப் பதிலாக - இந்துசமய விவகார அமைச்சின் செயலாளர் பரமேஸ்வரன் என்று திருத்தி வாசிக்கவும்.

**ராஜா** யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
இளைய தளபதி விஜய், மீராஜஸ்மின் நடித்த



புதிய கீதை

10.30, 2.30, 6.30, 9.30 (சி/881)

**திறைஞ்சனாஸ்** சங்கானை

சிவாஜி, பத்மினி நடித்த
**தில்லானா மோகனாம்பாள்**
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு (இரவு 8.45)
**CHINA STRIKE FORCE** (சி/882)


## கைதிகளுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை, யாழ. மனித முன்னேற்ற நடுநிலையத்தின் இயக்குநர் அருட் தந்தை ஜெயக் குமாரும் மற்றும் 'உயிர்ப்பூட்டல்' சமாதானக் குழுவினரும் இன்று சந்தித்து மனித உரிமைகள் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றினை நடத்தவுள்ளனர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
31 - 03 - 1916



மறைவு
23 - 04 - 2002

### அமரர் சரவணமுத்து சக்திவேல்


(இளைப்பாறிய முன்னைநாள் பிரதம தபால் அதிபர்)


திதி :- 12.05.2003 திங்கட்கிழமை

ஆண்டு ஒன்று போனாலும்
உங்கள் அன்பு நினைவுகள்
எல்லாம் எங்களுடன் தான்
அவரது ஆத்மா சாந்தியடைய
என்றும் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளையார் கோவிலடி,
நெடியகாடு,
வல்வெட்டித்துறை. (343)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.







## விவசாயப் பெருமக்களே!
## சைவ உணவக உரிமையாளர்களே!
## ஆயுர்வேத வைத்திய சிகாமணிகளே!
## எமது ஸ்தாபனத்திற்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

**எம்மிடம் :**

* நெல் குற்றும் இயந்திரம். * உமி நீக்கும் இயந்திரம் (China). * அரிசி பொலிசர் (China).
* மிளகாய், உழுந்து, கோப்பி அரைக்கும் (நவின் கெனடி பிராண்ட்) உலகப் பிரசித்தி பெற்ற இயந்திரம்.
* எந்த விதமான கடின உழைப்பிற்கும் அதிசக்தி வாய்ந்த (லிஸ்ரரைப்) பீசல் என்ஜின் (கெனடி நவின்)
  மாக் 20 H.P 10 H.P (குதிரை சக்தி) கொண்டவை.
  பெற்ற ரைப் 25 H.P 15 H.P 7 1/2 H.P 6 H.P (குதிரை சக்தி) கொண்டவை.
  விசை கூடிய என்ஜின் (கெனடி நவின்) R.P.M. 1500.
* கோப்பி அரைக்கும் இயந்திரம்.
  சைவ உணவகத்துக்கு உழுந்து சட்ணி, சம்பல், போன்று நீர் சேர்த்து அரைப்பதற்கு கெனடி நவின் ஈர அரையல் இயந்திரம்.
  2, 3, 5, 7 1/2, 10 , 15, 20 கிலோ வரை அரைக்கும் அளவுகளில் உண்டு.
  இவற்றில் மருந்து மூலிகைகளும் அரைக்க முடிவதால் வைத்திய சிகாமணிகளுக்கும் உகந்தது.
* ஈர அரிசி அரைக்கும் China மில்.
  17, 23, 37, 42 போன்ற தங்கள் தேவைக்கேற்ப அளவுகளில் இயந்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
  இவற்றுக்கான சகல உதிரிப்பாகங்கள் றபர், ரோமம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட பட்டிவகைகள் எல்லா அளவுகளிலும் "V" பெல்ட் (பட்டி) வகைகள். றபர் ஹோஸ், கிறைண்டர் பிளேற், சல்லடை வகைகள், மோட்டார் ஸ்ராட்டர் எல்லாம் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.
* வங்கிக் கடன் வசதி அல்லது குத்தகை வசதி தேவையானால் ஒழுங்கு செய்து தரப்படும் (40% வரை).



நேரில் வரவும்



ஏக இறக்குமதியாளரும் விநியோகஸ்தரும்
**சமுத்திரா ரேடேர்ஸ் லிமிட்டட்**
117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P 021-2222938

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்**
212, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021- 2225542

(சி/909)

# லொத்தர் சபை கையேற்பையடுத்து சந்திரிகா-ரணில் முரண்பாடு தீவிரம்!

## அரசாங்க அச்சகம் சீல் வைப்பு!



தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திடீரென தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டதையடுத்து - ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான உறவுநிலை மோசமடைந்து வருகிறது.

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபை, அமைச்சர் மிலிந்த மொறகொடவின் விஞ்ஞான, தொழில்நுட்ப, பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வந்தது. இதைத் தனியார் மயப்படுத்துவதற்கான முயற்சிகளில் அமைச்சர் மிலிந்த மொரகொட ஈடுபட்டுவந்தார்.

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபை தனியார் மயப்படுத்தப்படுவதை ஜனாதிபதி சந்திரிகா விரும்பாததால் தனது பொறுப்பில் எடுத்துக்கொள்வதாக அறிவித்தார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் கடந்த வியாழக்கிழமை இரவு வெளியிடப்பட்டது.

ஆனால், தம்மைக் கலந்தாலோசிக்காமல் ஜனாதிபதி சந்திரிகா தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையை தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டது தவறானது என்றும், அமைச்சர் ஒருவரின் பொறுப்பிலிருந்து இத்தகைய மாற்றத்தைச் செய்யும்போது தன்னுடன் ஆராய்ந்திருக்க வேண்டும் என்றும் கோரி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இந்தக்கடிதத்தில்- ஜனாதிபதியின் முடிவைத் தன்னால் ஏற்றுக் கொள்ளமுடியாது என்றும், இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுவதை இடைநிறுத்துமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகா நேற்றுமுன்தினம் இந்த வர்த்தமானி அறிவித்தலைப் பிரசுரிக்குமாறு அரசாங்க அச்சகத்திற்கு உத்தரவிட்டிருந்தார். இதையடுத்து நேற்றுமுன்தினம் இரவு பொறளையிலுள்ள அரசாங்க அச்சாக்கக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக பெருமளவான பொதுமக்கள் ஒன்று கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர்.



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் சமாதான முயற்சியினைச் சீர்குலைக்க வேண்டாம் எனக் கோஷமிட்டதுடன், அரசாங்க அச்சகத்துக்குள்ளேயும் நுழைய முயன்றனர்.

இதையடுத்து, அப்பகுதியில் ஏற்பட்ட அமைதியின்மையை கருத்தில் கொண்டு, பொலிஸார் விரைந்து செயற்பட்டு - அரசாங்க அச்சகத்தைச் சீல்வைத்து மூடினர்.

அத்துடன், அரசாங்க அச்சகம் அமைந்துள்ள பகுதியான பொறளைச் சந்தியிலிருந்து வெலிக்கடைச் சிறைச்சாலைவரையான வீதி பொதுமக்களின் போக்குவரத்துக்குப் பொலிஸாரால் தடைசெய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான முறுகல் மேலும் தீவிரமடையலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.



பொறளை சந்தியில் உள்ள அரசாங்க அச்சகத்துக்கு முன்னால் நேற்று முன்தினம் நள்ளிரவு பொலிஸார் குவிக்கப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

### முத்திரைகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ்.தபாலகத்திற்கு ரூபா 500, ரூபா 1000 பெறுமதியான முத்திரைகள் வந்துள்ளன. பொதுமக்கள் அவற்றைக் கொள்வனவு செய்ய முடியும் எனப் பிரதம தபாலதிபர் அறிவித்துள்ளார்.

### ஓய்வூதியர் நலன்புரிச் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தொகுதி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் 20 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம், நல்லூர் திவ்விய ஜவன சங்க மண்டபத்தில் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

செ.குஞ்சிதபாதம் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக, நல்லூர் பதில் பிரதேச செயலர் இ.ரவீந்திரசர்மா கலந்துகொள்வார்.

# கொலைகளைக் கட்டுப்படுத்த மீண்டும் மரணதண்டனை!

## அவசியம் என்கிறார் அமைச்சர் ஜோன் அமரதுங்க

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த மீண்டும் மரணதண்டனை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டியது அவசியம் என்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் ஜோன் அமரதுங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

அதிகரித்துவரும் கொலைகளைக் கட்டுப்படுத்த, மரணதண்டனைமுறை மீண்டும் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். இதன் மூலமே குற்றம் புரியத் துணிபவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்த முடியும்.

மரணதண்டனையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவது தொடர்பாக நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி விவாதம் நடத்தப்படும் என்றும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க மேலும் தெரிவித்தார்.

# பிந்துனுவெவ படுகொலை தீர்ப்பு அடுத்த மாதம்!

(கொழும்பு)

பதுளை - பிந்துனுவெவ தடுப்பு முகாமில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பான விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளன. இந்த வழக்குத் தொடர்பான தீர்ப்பு அடுத்த மாதம் 11 ஆம் திகதி வழங்கப்படும் என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 17 ஆம் திகதி பிந்துனுவெவ தடுப்பு முகாமில் 25 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 14 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தப் படுகொலை தொடர்பாக 41 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 25 பேர் விடுவிக்கப்பட்டனர்.

உயர் நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்த விசாரணைகள் முடிவுற்று தீர்ப்பு அடுத்த மாதம் 11 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் குழுவே பேச்சுக்கான பிரதிநிதியை தீர்மானிக்கும்!

## முஸ்லிம் எம்.பிக்கள் தீர்மானம்

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் சார்பில் பங்குபற்றும் பிரதிநிதியை - முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவே தீர்மானிக்கும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கட்டத்தில் இடம்பெற்ற முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தக் கூட்டத்துக்கு மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் எம்.எச்.முகமட்டும், பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசியும் இணைத்தலைமை வகித்தனர்.

### டெங்கு பரப்பும் குடம்பிகள் அழிப்பு!

இயக்கச்சி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வன்னி வலயப் பூச்சியியல் ஆய்வாளர்களினால் டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்புக் குடம்பிகள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

அத்துடன், பளைப் பிரதேசத்தில் வன்னி வலயப் பூச்சியியல் ஆய்வுப் பிரிவினரால் டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டன. (34)

# கதிர்காமரின் நடாளுமன்ற உரை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

## படையதிகாரிகள் கருதுவதாகத் தகவல்

ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகரான லக்ஷ்மன் கதிர்காமர், நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை ஆற்றிய உரை - நாட்டின் தேசிய பந்தோபஸ்துக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக படையதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இந்திய இராணுவ முன்னாள அதிகாரி ஜெனரல் சதீஷ் நம்பியாரின் உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான அறிக்கை, ஜனாதிபதி சந்திரிகாவிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையில் சில இரகசிய விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. இந்த இரகசிய விடயங்கள் சிலவற்றை - லக்ஷ்மன் கதிர்காமர் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் வெளிப்படுத்திவிட்டதாகப் படையதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த இரகசியங்கள் வெளியிடப்பட்டதால், இவை எதிரிகளுக்குச் சாதகமாக அமைந்துவிடும் என்றும், இது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கிறது என்றும் படையதிகாரிகள் குற்றஞ்சாட்டியிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சின்னஞ்சிறு செய்திகள்

### பாடசாலைக் கிரிக்கெட் இன்றைய போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் அஸ்ரா வெற்றிக் கிண்ணத்துக்காக ஏற்பாடு செய்துள்ள கிரிக்கெட் போட்டியில் இன்று யாழ். மாவட்டத்தில் இரண்டு போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தா அணியும்,

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதவுள்ளன.

யாழ் மாவட்டத்திலிருந்து பங்குபற்றும் 12 பாடசாலை அணிகளில் இருந்து நான்கு அணிகள் ஏனைய மாவட்ட அணிகளுடன் மோதுவதற்கான தகுதியினைப்பெறும். (28)

### தியானம் பற்றிய கருத்தரங்கு

(இணுவில்)

பிரம்ம குமாரிகளின் இராஜ யோக நிலைய ஆதரவில் தியானம் பற்றிய விசேட கருத்தரங்கு, இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நாளைமறுநாள் பி.ப. 3 மணியளவில் இடம்பெறவுள்ளது.

### மக்கள் வங்கி சர்வதேசப் பிரிவு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் சர்வதேசப்பிரிவு நாளை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இந்த சர்வதேசப் பிரிவின் மூலம் காசோலைவழங்கல், காசாக்கல், நாணயத்தாள்கள் வழங்கல், வெஸ்ரேன் யூனியன் பணப்பரிமாற்றம், வதியாதோர் மற்றும் வதிவோர் வெளிநாட்டுக் கணக்கு ஆரம்பித்தல், ஆவணக் கடன்கள், கப்பலேற்றுவதற்கான உத்தரவாதம், நம்பிக்கை மாற்றுச் சீட்டுக் கடன்கள், அடமானக்கடன் வசதிகள் போன்ற சேவைகளைப் பெறமுடியும் என்று மக்கள் வங்கி தெரிவித்துள்ளது.

### நூல் வெளியீடு

அகளங்கனின் 'பாரதப் போரில் மீறல்கள்' என்ற நூல் வெளியீட்டு விழா இன்று காலை 9.30 மணிக்கு வவுனியா சுந்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் ஸ்ரீகணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

### வலி. வடக்கில் 50 வீடுகள் அமைக்கப்படும்

(வலிகாமம்)

வலி. வடக்குப் பகுதியில் ஜி.ரி.சற் நிறுவன திட்டத்தின் கீழ் 50 வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இளவாலை, துர்க்காபுரம் வடமேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலேயே வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அம்பன் பகுதியில் சமுர்த்தி வங்கி

(மட்டுவில்)

வடமராட்சி கிழக்கு மக்களின் நன்மை கருதி, அம்பன் பகுதியில் விரைவில் சமுர்த்தி வங்கியொன்று திறந்து வைக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை சமுர்த்தி அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

வடமராட்சி கிழக்கில் ஏற்கனவே ஒரு சமுர்த்தி வங்கி இயங்கி வருகின்றது. அம்பன் பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ள இவ்வங்கி வடமராட்சி கிழக்கில் இயங்கவுள்ள இரண்டாவது சமுர்த்தி வங்கி என்பது குறிப்பிடத்தக்கது. (24)

### நயினாதீவு விகாரைக்கு குடிநீர் வசதிகள்

(மட்டுவில்)

நயினாதீவு நாகவிகாரைக்கு குடிதண்ணீர் விநியோகிப்பதற்கென சமூக சேவைகள் திணைக்களத்தினால் 2 லட்சத்து 85 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியினைக் கொண்டு வேலணை பிரதேச செயலகத்தினர் நீர்விநியோகப் பணியினை மேற்கொள்ளவதற்கான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றனர். (24)

# அரச சார்பற்ற நிறுவன ஊழியருக்கு எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

## தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஏற்பாடு

எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த வியாழக்கிழமை தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழக அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில், எயிட்ஸ் நோய் எவ்வாறு பரவுகின்றது என்பது பற்றியும், அதனை எவ்வாறு தடுப்பது என்பது பற்றியும், மக்கள் எவ்வாறு விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும் என்பன போன்ற விடயங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

'யுனிசெப்' நிறுவனத்தின் உதவியுடனேயே, தமிழ் அகதிகள் புனர்வாழவுக் கழகத்தால் எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு அரசசார்பற்ற ஊழியர்களுக்கு நடத்தப்பட்டு வருகிறது.

இதன் முதல் நிகழ்வாகவே கடந்த வியாழக்கிழமை 'ஹலோ ட்ரஸ்ட்' மிதிவெடி அகற்றும் நிறுவன ஊழியர்களுக்கு எயிட்ஸ் நோய் பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

மாதாந்தம் இதுபோன்ற கருத்தரங்குகள் நடைபெறும் எனத் தெரிய வருகிறது.

யாழ். குடாநாட்டில் இதுவரை எயிட்ஸ் நோய்த் தொற்றுக்கு இலக்கான 23 பேரில், 16 பேர் மரணத்தைத் தழுவியுள்ளனர். மிகுதி 7 பேர் நோயுடன் வாழ்கின்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (சு,ரா)

# போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பம் செய்யலாம்

(கொழும்பு)

அரச கருமமொழித் திணைக்களத்தின் அனுசரணையுடன் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சிங்கள, ஆங்கில மொழிப் பயிற்சிகள் - பிரதேசரீதியாகவும், அகில இலங்கைரீதியாகவும் நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சிகளை நடத்துவதற்குரிய போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மொழியை ஒரு பாடமாகக் கொண்ட பட்டத்தகைமையுடையவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவர். அத்துடன், குறித்த மொழியில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களும், ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் - தமது சுயவிபரத்தைத் தயாரித்து, எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். வலயக் கல்விப் பணிமனைக்குக் கிடைக்கச் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# சாவகச்சேரி நகரப்பகுதியில் மீண்டும் குடிநீர் விநியோகம்!

சாவகச்சேரிப் பொதுச்சந்தை மற்றும் நகரை அண்மித்த சில பகுதிகளில் மீண்டும் குடிநீர்விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கின் அவசர புனரமைப்புத் திட்டத்தின்கீழ் 1 கோடி 18 இலட்சம் ரூபா நிதி, சாவகச்சேரிப் பொதுச்சந்தைப் பகுதிக் குடிநீர் விநியோகத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபைக்கு உரித்தான பொதுச்சந்தையின் உள்ளேயும், நகரை அண்மித்த பகுதிகளிலும் குழாய்மூலம் குடிதண்ணீர் விநியோகிக்க நீர்த்தாங்கிகள் அமைக்கப்பட்டுவருகின்றன.

கடந்த காலங்களில் தென்மராட்சிப் பகுதியில் ஏற்பட்ட யுத்தத்தால் பொதுச்சந்தையிலிருந்த கிணறு பாரிய சேதத்திற்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (34)



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் இருமாடிக் கட்டடத்தை அமைப்பதற்கான அடிக்கல்லை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நாட்டுகின்றார். அருகே பிரதி அதிபர் க.தர்மலிங்கம், தொழிநுட்ப உத்தியோகத்தர் தவராஜா, செந்தில்நாதக் குருக்கள் ஆகியோரைக் காணலாம். (116)


## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

### முதலாவது அகவையில்

பெயர் : இ.லாஜனன்
முகவரி : 3 ஆம் வட்டாரம், நயினாதீவு.



### இரண்டாவது அகவையில்



பெயர் : த.ஆர்த்திகா
முகவரி : ஜனசக்தி வீதி, சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

### ஏழாவது அகவையில்

பெயர் : தே.சங்கீதா
முகவரி : 64/2, வைமன் வீதி, நல்லூர்.



### ஒன்பதாவது அகவையில்



பெயர் : சு.அபிரான்
முகவரி : 78, சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி :------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்


## சின்னஞ்சிறு செய்திகள்

### மீண்டும் அல்லிப்பளையில் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தத்தினால் ஏழு வருடங்களாக மூடப்பட்ட நிலையிலிருந்த அல்லிப்பளை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை, மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாடசாலைச் சமூகமும், கல்வித் திணைக்களமும் இணைந்து பாடசாலைப் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டுவருகின்றன.

### பாஷையூரில் இசை நாடகம்

(பாஷையூர்)

பாஷையூர் ஒளிமலர் நாடகமன்றம் வழங்கும் 'கயல்விழி' இசை நாடகம் பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக அரங்கில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராகத் திருமறைக் கலாமன்றப் பிரதி இயக்குநர் யோ.யோன்சன் ராஜ்குமாரும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும் கலந்துகொள்ளவுள்ளனர். (119)

### சமுர்த்தி உத்தியோகத்தருக்கு பயிற்சி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி, நெடுந்தீவுப் பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிநெறி நேற்றுமுன்தினம் தொடக்கம் குருநாகல், வாரியப்பொலவில் நடைபெற்று வருகின்றது.

இப்பயிற்சிநெறி இன்றுடன் பூர்த்தியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது. (34)

### சிறந்த லயன்ஸ் கழகமாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

'306 பி' மாவட்டத்தில் சிறந்த லயன்ஸ் கழகமாக - சாவகச்சேரி லயன்ஸ் கழகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் கடந்த வருடங்களில் செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் அடிப்படையிலேயே இந்தத் தெரிவு இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், சாவகச்சேரி லயனஸ் கழகத்தைச் சேர்ந்த 16 நிர்வாகிகள், சிறநத சேவையாளர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். அடுத்தமாதம் இரண்டாம், மூன்றாம் திகதிகளில் இவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது. (34)

# திருத்தப்படாத வீதியால் பொதுமக்களுக்குச் சிரமம்

கைதடி-நுணாவில் வைரவர் கோயிலடியிலிருந்து மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் வரை செல்லும் வீதியில், சுமார் ஒரு கீலோ மீற்றர் நீளமான பகுதி மிக நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் குன்றும்குழியுமாகக் காணப்படுகின்றது.

கடந்த 2000 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னர் - இவ்வீதி கண்டி வீதி தொடக்கத்திலிருந்து மட்டுவில் சிவன் கோயிலடிப் பகுதி வரை புதிதாகக் கற்கள் போடப்பட்டுத் திருத்தப்பட்டது. அம்மன் கோவில் பக்கமாகவுள்ள இறுதிப்பகுதி மட்டும் திருத்தப்படவில்லை.

மழை காலத்தில் இப்பகுதியில் சுமார் 3 அடி உயரத்திற்கு நீர் தேங்குவதனால், போக்குவரத்துச் செய்யமுடியாமல் மக்கள் திண்டாடுவதும் குறிப்பிடத்தக்கது.

# மாவீரர் நித்தி நினைவாக கொற்றாவத்தையில் கூட்டம்

இராணுவத்தினரால் 1984 ஆம் ஆண்டு சுட்டுக்கொல்லப்பட்ட வீரவேங்கை நித்தி (ஜெயம்) மற்றும் அன்றையதினம் படுகொலை செய்யப்பட்ட 36 பொதுமக்களின் நினைவுக் கூட்டம் நேற்று முன்தினம் வல்வெட்டித்துறையில் நடைபெற்றது.


நேற்றுமுன்தினம் மாலை 5 மணிகது கொற்றாவத்தை, இலந்தைக்காடு வீரவேங்கை நித்தி சனசமூக நிலைய முன்றலில், நிலையத்தின் முன்னாள் தலைவர் ந.ரவிச்சந்திரன் தலைமையில் இந்த நினைவுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த நினைவு நிகழ்வில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் வடமராட்சி அமைப்பாளர் ச.அரவிந்தன், விடுதலைப் புலிகளின் பிரமுகர் அமுதாப் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதனைத் தொடர்ந்து - புதுவை அன்பனின் 'கரைதேடும் ஓடங்கள்' நாடகமும், இசை நிகழ்வுகளும் நடைபெற்றன.

## விளையாட்டு அரங்கம்

# உதைபந்தாட்டம் ஒரு விவரணம்



எமது மண்ணிலே இன்று பெரும்பாலும் பலராலும் விரும்பி ஆடப்படும் ஒரு விளையாட்டாக உதைபந்தாட்டம் இருக்கிறது.

நவீன உதைபந்தாட்டம், சுமார் 140 ஆண்டு வயதுடையதாக இருந்தபோதிலும், 4000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் - இன்றைய நவீன ஆட்டம் போலல்லாது ஏதோவொரு வகையில் காலினால் பந்தை உதைத்தாடியதற்கான சான்றாதாரங்கள் உண்டு.

முதன்முதலில் சீனாவில் கி.மு. 400 ஆம் ஆண்டளவில் உதைபந்தாட்டம் ஆடப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற போதிலும், கி.மு. 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன் எகிப்தில் உதைபந்தாட்டம் இருந்ததாக எகிப்திய கல்லறைகளில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் மூலம் தெரியவருகின்றது.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் சீன மன்னனின் படை வீரர்கள் உதைபந்தாட்டம் போன்று விளையாடியுள்ளனர். அப்பந்தானது - தோல் மற்றும் இறகுகள் என்பனவற்றால் நிரப்பப்பட்ட உருண்டையான பந்தாக இருந்துள்ளது.

ஆனால், அங்கே கோல் கம்பம் - வளையமாக இருந்துள்ளது. உயரே கட்டப்பட்டுள்ள வளையத்தினுள் சென்று விழும்படி பந்தை உதைத்தால், உதைத்தவருடைய அணிக்கு ஒரு கோல் கிடைக்கும்.

இதேவேளை, சீனாவில் வேறொரு முறையாகவும் உதைபந்தாட்டம் ஆடப்பட்டுள்ளது. அத்தோடு, கிரேக்க நாட்டிலும் உரோமப் பேரரசின் இன்றைய ஆட்டம் போன்று உதைபந்தாட்டம் ஆடப்பட்டுள்ளது.

இன்று நாம் ஆடும் உதைபந்தாட்டம், இங்கிலாந்திலேயே தோற்றம் பெற்றது. கி.பி. 8 ஆம் நூற்றாண்டிலிருந்து இங்கிலாந்திலும், ஸ்கொட்லாந்திலும் உதைபந்தாட்டம் ஆடப்பட்டுள்ளது. 1100 ஆம் ஆண்டளவில் லண்டன் தெருக்களிலே உதைபந்தாட்டம் ஆடியதாக வரலாறு உண்டு. அத்தகைய ஒழுங்கற்ற, முரட்டுத்தனமான தன்மையைக் கொண்டதாக இது காணப்பட்டது.

கிராமம் முழுவதும் ஆடுகளமாகக் காணப்படும். கோயிற் கதவுகளே கோல்கம்பங்களாகப் பாவிக்கப்பட்டன. இரண்டு கிராமங்களிடையே நடைபெற்ற ஆட்டத்தில் திருமணமானவர்கள், திருமணமாகாதவர்களுக்கு இடையே போட்டிகள் நடைபெற்றுள்ளன.

இப்போட்டி நடைபெறுகின்றது என்றால், பாடசாலைகள் யாவும் மூடப்பட்டுவிடும். கிராமத்திலே கலவரம் நடைபெறுவது போன்று மக்கள் பல்வேறு துன்பங்களை எதிர்நோக்கினர். கிராமத்தில் போக்குவரத்துத் தடைப்பட்டது. இதனால், இந்த ஆட்டம் **Useless Foot ball** எனப் பெயர்பெற்றது. இதன் தொல்லை தாங்கமுடியாது ஸ்கொட்லாந்து, இங்கிலாந்து அரசர்கள் இதைத் தடைசெய்தனர். ஆனாலும், இந்த ஆட்டம் மக்கள் மத்தியிலே வளர்ந்துகொண்டே இருந்தது. எந்தச் சட்டத்தினையும் போட்டு அதனை அழித்துவிட முடியவில்லை.

1800 ஆம் ஆண்டளவில் இங்கிலாந்தின் பல பாடசாலைகளில் எமது இன்றைய ஆட்டத்தின் தன்மையினைக் கொண்டு ஓர் ஆட்டம் ஆடப்பட்டது. உதைபந்தாட்டத்தினை வளர்த்த பெருமை **ETON, HARROW WINCHESTER** போன்ற பாடசாலைகளைச் சாரும். 1848 இல் பல பாடசாலைகள் திருத்துவக் கல்லூரியில் ஒன்றுகூடி, தமக்கென சில உதைப்பந்தாட்டச் சட்டங்களை ஏற்படுத்திக்கொண்டன. இதற்கு முன்னர் 1846 "றக்பி" என்ற இடத்தைச் சேர்ந்த டாக்டர் தோமஸ் ஆர்னல்ட் (**Dr.Thomas Arnold**) என்பவர் சில சட்டங்களை ஏற்படுத்தியிருந்தார்.

இதேவேளை - 1863 ஆம் ஆண்டுக்கு முன்பு பந்துகளைக் காலினால் உதைத்து ஆடிய முறையினை "**Foot ball**" என அழைத்தனர்.

**- எவ்.எக்ஸ்.சுதர்சன் -**



(தொடரும்)

# முற்றுப்பெறாத — குருஷேத்திரப்போர்

அண்மையில் இந்தியா - பாகிஸ்தான் அரசுகளுக்கிடையே தோன்றியுள்ள சுமூகநிலை இரண்டு அணிகளுக்கிடையேயும் கிரிக்கெட் போட்டிகளை ஏற்படுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கிடையே இந்தியா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, இந்திய அரசாங்கத்திடம் இந்திய - பாகிஸ்தான் போட்டிகள்ள நடாத்துவதற்கு அனுமதிகோரியதாகத் தெரிகின்றது. பிரதமர் வாஜ்பாய் இன்னும் சிலதினங்களில் கபினெட் முடிவை அறிவிப்பார் என எதிர்பார்ப்பதாகக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினர் தெரிவிக்கின்றனர்.



ஆனால், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையினர் - தாங்கள் பெப்ரவரி 2004 இல் இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ள **ICC** இன் அனுமதியைக் கோரியுள்ளதாகக் கூறியுள்ளனர். **PCB** இன் நிறைவேற்றதிகாரி லெப். ஜெனரல் தாக்கீர் ஷியா **ICC** கூட்டத்தில் இதனை வலியுறுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

போட்டிகளை நடத்த இரண்டு நாடுகளும் மறுக்கும் பட்சத்தில், இத்னை நடுநிலையான ஒரு நாட்டில், ஒழுங்கு பண்ணுவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருவதாக ஒரு கருத்து நிலவுகின்றது. இதற்கிடையே **PCB** இல் புதிய முகம் - ரமீஸ் ராஜாவுடைய வரவு பாகிஸ்தான் கிரிக்கெட் ரசிகர்களிடையே நல்வரவேற்பைக் கொடுத்துள்ளது.

# வருகின்றார் பேவன்



பேவன்

சுலபமாக டெஸ்ட் போட்டிகளில் மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சுருட்டிய அவுஸ்திரேலியாவுக்குத் தெரியும் - தாங்கள் ஒருநாள் போட்டிகளில் மேற்கிந்தியத் தீவுகள் அணியிடம் வாங்கிக்கட்டுவோம் என்று. இதன் காரணமாக ஒருநாள் போட்டிகளுக்கான அவுஸ்திரேலிய அணித்தெரிவு மிகவும் கவனமாக நடைபெறுவதாகத் தெரிகின்றது. மைக்கல் பேவன் ஒருநாள் போட்டிகளில் ஆடுவதற்கு அழைக்கப்பட்டிருப்பது - **ACB** இன் நல்லதெரிவு. இடதுகைத் துடுப்பாட்ட வீரரான பேவன் - ஒருநாள் போட்டிகளில் மொத்தமாக 186 போட்டிகளில் ஆடி, 5807 ஓட்டங்களைப் பெற்றிருக்கின்றார். அவரது சராசரி 54.78. இவர் டெஸ்ட் போட்டிகளில் சிறப்பாக ஆடுவதில்லை என்ற குறை இருக்கின்றது. 7 ஒருநாள் போட்டிகளைக் கொண்ட தொடர் ஜமைக்காவில் மே 17 ஆம் திகதி தொடங்குகின்றது.

## CRICKET FLASH NEWS

தருவது P.N.சுதர்சன்

# முழுதும் இளமை



ஜேக்கப்ஸ்

டெஸ்ட் அணியிலிருந்து நீக்கப்பட்ட ரிட்லி ஜேக்கப்ஸ், ஒருநாள் அணிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றார். இவர் ஒரு சிறந்த விக்கெட் கீப்பர் மட்டுமல்ல, நல்ல துடுப்பாட்டக்காரரும்கூட. அணித்தலைவர் லாரா முற்றுமுழுதாக இளம் வீரர்களை மட்டுமே நம்பிக் களம் இறங்குகின்றார். புதிய வரவுகளாகச் சகலதுறை ஆட்டக்காரராகிய ரியன் ஹேர்லி அழைக்கப்பட்டிருக்கிறார். இவருடன் சில புதிய முகங்கள் (டெஸ்ட்டில் ஆடியோர்) டேவன் சிமித், டேவிட் பேர்னாட், ஓமாரி பாங்ஸ், டினோ பெஸ்ட் ஆகியோருடன் இணைந்து கொள்கின்றனர். இவர்களுடன் சர்வான், சந்தர்போல், கொலிமோர் டில்லான், டிராக்ஸ், கைல், லோசன், சாமுவேல்ஸ் ஆகிய இளம் நட்சத்திரங்கள் இருப்பது கட்டாயம் அவுஸ்திரேலியக் கூடாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தத்தான் செய்யும்.

# இது CARNIVAL

அவுஸ்திரேலிய - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையே நடைபெற்ற 3 ஆவது டெஸ்ட் போட்டியில் கிரிக்கெட் ரசிகப் பெருமக்களுடைய அட்டகாசம் தாங்க முடியவில்லை. **Kensington Oval** மைதானத்தில் ஒதுக்கப்பட்ட இடங்களில் தங்களுடைய வாகனங்களை நிறுத்தாமல், கண்டகண்ட இடங்களில் எல்லாம் வாகனங்களை நிறுத்தியிருக்கிறார்கள். ஆனால், இந்த மைதானத்தில் கடும் வெப்பத்தையும் பொருட்படுத்தாது ரசிகர்கள் குவிகின்றார்கள் என்றால் ஏதோ விடயம் இருக்கத்தான்வேண்டும். பியர் மற்றும் குளிர்பானங்கள் நன்கு குளிரூட்டப்படதாகக் கிடைப்பதும் ஒரு காரணமாக இருக்கின்றது. அண்மையில் இருக்கின்ற சந்தையில்- கிரிக்கெட் துடுப்புகளிலிருந்து, நல்ல சோறு வரை வாங்கக்கூடியதாக இருக்கின்றது.

உண்மையில் இதனை ரசிகர்கள் ஒரு திருவிழாப் போலவே எடுத்திருக்கின்றார்கள். அவர்கள் மைதானத்தில் ஹோர்ன், விசில் ஆகியவற்றைக் கொண்டு ஒலியெழுப்பி மகிழ்ந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. உண்மையில் இந்த ரசிகர்கள் கிரிக்கெட் ஆட்டத்தினை ரசிப்பவர்களாகவே உள்ளனர்.



# நல்லதே நடக்கட்டும்




கடந்த வருடம் இலங்கையில் நடைபெற்ற ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளைச் சிறப்பாக நடாத்தி முடித்தமைக்குப் பரிசாக, இவ்வருடம் (ASIAN GRAND PRIX) ஆசிய கிராண்ட் பிரிக்ஸ் தடகள நிகழ்வுகளின் இரண்டாம் கட்டத்தை நடாத்தும் சந்தர்ப்பம் இலங்கைக்கு வழங்கப் பட்டுள்ளது. இந்த வகையில், இந்நிகழ்வு இலங்கையில் நடைபெறும் சர்வதேச அளவிலான இரண்டாவது தடகளப் போட்டியாகும். இந்நிகழ்வை இலங்கை தடகளச் சம் மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து நடாத்தவுள்ளன.

இலங்கைக்கான இந்தச் சந்தர்ப்பம் - ஆசிய தடகளச் சம்மேளனத்தினால் வழங்கப்பட்டுள்ளமை பெருமைக் குரியதாகும். இந்த வருடத்துக்கான (ASIAN GRAND PRIX) நான்கு கட்டங்களில் நடைபெறவுள்ளது. முதற்கட்டத் தடகளப் போட்டிகள் இந்தியாவின் ஹைதராபாத் நகரில் மே மாதம் 28 ஆம் திகதி நடைபெற்று, ஜுன் முதலாம் திகதி இரண்டாம் கட்டம் இலங்கையில் நடைபெறும். தொடர்ந்து மூன்றாம் கட்டம் ஜுன் ஐந்தாம் திகதி தாய் லாந்தின் பாங்கொக் நகரில் நடைபெறும். இறுதியாக நான்காம் கட்டம் - ஜுன் ஒன்பதாம் திகதி பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெறும். ஒவ்வொரு கட்டமும் மூன்று மணித்தியாலங்கள் மட்டுமே நடைபெறும். இலங்கையில் நடைபெறும் நிகழ்வுகள் - ஜுன் முதலாம் திகதி மாலை 5 மணிக்கும் 8 மணிக்கும் இடையில் நடைபெறுவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் ஆண்களுக்கான நிகழ்வுகள் ஒன்பதும், பெண்களுக்கான நிகழ்வுகள் ஏழுமாக வரையறை செய்யப்பட்டுள்ளன.

ஆண்கள் - 100M, 400M, 800M ஓட்டங்கள், 110M தடைதாண்டல் ஓட்டம், உயரம் பாய்தல், நீளம் பாய்தல், பரிதிவட்டம் வீசுதல், ஈட்டி எறிதல், 4x100M அஞ்சலோட்ட நிகழ்வுகளில் பங்குகொள்வர். பெண்கள் - 100M, 400M, 800M ஓட்டங்கள், 100M தடைதாண்டல் ஓட்டம், நீளம் பாய்தல், குண்டெறிதல் மற்றும் 4x100M அஞ்சலோட்டம் முதலிய நிகழ்வுகளில் பங்குகொள்வார்கள். அஞ்சலோட்ட நிகழ்வுகள் இம்முறையே முதன்முதலாகச் சேர்க்கப்பட் டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளுக்கான போட்டியாளர்களைத் தெரிவு செய்யும் முறை, இவற்றில் பங்குகொள்ளப்போகும் போட்டியாளர்களின் தகுதியைத் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகிறது. கடந்த வருடம் இலங்கையில் நடைபெற்ற ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் மற்றும் பூசான் நகரில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற வீர, வீராங்கனைகளில் இருந்து மட்டுமே இப்போட்டிகளுக்குப் போட்டியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இலங்கையின் சார்பில் பங்குகொள்ளத் தெரிவுசெய்யப் பட்டவர்களின் பெயர், விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. சுசந்திகா ஜயசிங்க (100M), தமயந்தி தர்ஷா (400M), சுகத் திலகரட்ண, மற்றும் ரோகான் பிரதீப்குமார (400M), சிறியாணி குலவன்ச (100M தடைதாண்டல்) ஆகியவர்கள் மட்டுமே இப்பெருமைமிகு போட்டிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். மேலும் நடைபெறவிருக் கும் நிகழ்வுகள் எல்லாவற்றிலும் வீரர்கள் இருவர் வீதம் பங்குபற்றும் வாய்ப்பு - நிகழ்வை நடாத்தும் நாடு என்ற வகையில் இலங்கைக்குக் கிடைக்கும்

இந்தப் போட்டிகளில் வெற்றிபெறுவோருக்கான முதலா வது பரிசு - ஏறத்தாழ மூன்று இலட்சம் ரூபா, இரண்டாவது பரிசு - ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா, மூன்றாம் பரிசு - ஐம்பதாயிரம் ரூபா என்றவாறு அமையும். ஏறத்தாழ 200 தடகள வீரர்கள் பங்குகொள்ளும் இந்நிகழ்வுக்கான செலவு - ரூபா 75 இலட்சத்தைத் தாண்டும் என எதிர்பார்க் கப்படுகின்றது.

சிறப்பாக இந்நிகழ்வுகள் பற்றிக் குறிப்பிடக்கூடிய விடயம் - இந்தச் செலவுகளையெல்லாம் அனுசரணையா ளர்கள் ஏற்றுக்கொள்வதுதான். அதேவேளை, ரூபவாஹினி நேரடி ஒளிபரப்புச் செய்வதாக ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.




இதெல்லாம் ஒருபுறம் இருக்க, ஒரேயொரு வில்லன் இந்தப் போட்டிகளுக்குக் குறுக்கே வந்துவிடுவாரோ என்று எல்லோரும் அச்சப்படுகிறார்கள். அவர்தான் SARS. இது வரையில் SARS வைரஸ் ஆபத்து இலங்கையை எட்டிப் பார்க்கவில்லை என்றே கருதப்படுகிறது. அதன்மீதான கடும் நடவடிக்கைகளை முடுக்கிவிடுவதன்மூலம்; சிறந்ததொரு தடகள நிகழ்வைப் பார்க்கும் சந்தர்ப்பத்தை இலங்கை ரசிகர்கள் பெற்றுக்கொள்வார்கள் என்பது நிச்சயம்.

**- ஜோசப் கிருஷ்ணா -**

# LAST WARNING



அக்தர்

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் அனுபவம் என்ற போர்வையில் பல ஜாம்பவான் களுடன், தென்னாபிரிக்கா சென்ற பாகிஸ்தானிய அணி வெறுங்கையோடு பாகிஸ்தான் திரும்பியதும், அதன்பின் - மிகப் பிரபலங்கள் பல அணியை விட்டுத் தூக்கியெறியப்பட்டதும் பழைய கதை. அதன்பின் புதிய தலைமுறை ஒன்றை உருவாக்குவோம் என்ற வகையில் நிறைய, இளைய புதுமுகங்களுடன் சார் ஜாவிற்குத் தன் கன்னிப் பயணத்தை மேற்கொண்டது பாகிஸ்தான் அணி. அங்கு பாகிஸ்தான் - தான் யார் என்பதை நிரூபித்தது. ஒப்பீட்டளவில் உலகக் கிண்ணப்போட்டிகளின் பின் இலங்கையோ, தென்னா பிரிக்காவோ காட்டாத வீச்சை (பங்களாதேஷில் தென்னாபிரிக்கா காட்டுவது வீச்சென்ற பதத்துக்குள் அடங்காது) பாகிஸ்தான் காட்டியது யாரும் மறுக்க முடியாத உண்மை. மறுபுறம் மேற்கிந்திய அணி தமது பலவீனமான பந்துவீச்சால் - அவுஸ்திரேலியா விடம் தோற்கிறதே ஒழிய, தமது துடுப்பாட்டத்தால் அல்ல. இதெல்லாம் ஒரு புறமிருக்கத் தற்போது முத்தரப்பு ஒருநாள் போட்டிகளில் கலந்துகொள்வதற் குப் பாகிஸ்தான் அணி இலங்கை வந்துள்ளது. இவர்கள் இலங்கையில் சந்திக்கப்போவது நியூசி லாந்து மற்றும் இலங்கை அணிகளை. மூன்று அணிகளிலும் மாற்றங்கள் இருந்தாலும், பாகிஸ்தான் அணிபோல மற்றைய இரண்டு அணிகளும் கூடுதலா கச் செப்பனிடப்படவில்லை.

பாகிஸ்தான் அதிகாரிகள் தற்போது வேறுவித மாகச் சிந்திக்கத் தலைப்பட்டுவிட்டார்கள் போலத் தான் தோன்றுகிறது. மைதானத்தில் சும்மா விளை யாடிவிட்டுப் போகமுடியாது. அந்தந்த ஒழுங்கில் தொழிலைப் பார்க்கவேண்டுமென்று கொடுத்த வெருட் டலில், பாகிஸ்தான் அணி அந்தமாதிரித்தான் செய்கிறது. இந்நிலையில் இலங்கை வந்துள்ள அணியில் ஒரு பிரபல்யம் இடம் வகிக்கிறார். அவர்தான் சொஹெய்ப் அக்தார். தட்டுபபட்ட எல்லாப் பிரபல்யங்களும் புறந்தள்ளப்பட்டிருக்க, இவர் மட்டும் பாகிஸ்தான் அணிக்குள் உள்வாங்கப்பட்டிருக்கிறார். அதிலும், ஒரு விசேடம் உண்டு. நீ இல்லாவிட்டால் அணியே இல்லை. ஆகவே, வந்து தோள்கொடு என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கெஞ்சித்தான் இவரை அணிக்குள் கொண்டுவந்துள்ளது என்று நினைத்தால் அது தப்பு. அதிகாரிகள் அக்தார் தொடர்பில் விலாவாரியாக எல்லாமே எடுத்துக் கூறப்பட்டுள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் லெப். ஜெனரல் தாக்கீர் ஷியா கருத்துக் கூறும்பொழுது - அக்தருக்கு அவரேதான் எதிரி. அவர் திறமைசாலி. ஆனால், இதுவே அவருக்குக் கடைசிச் சந்தர்ப்பம். அவர் தன் நடத்தை முறைகளில், பழகுவதில், பேசுவதில் ஒழுங்குமுறைகளைப் பேணவேண்டும். தன் எண்ணப்படி நடப்பதை நிறுத்திக் கொள்ளவேண்டும். ஒரு ஒழுங்கான கிரிக்கெட் வீரராக மாறவேண்டும் என்று எச்சரித்துள் ளார். அக்தாரின் சராசரிகள் அருமையானவை. 25 டெஸ்ட் போட்டிகளில் - 88 விக்கெட்டு கள். 81 **ODI** களில் - 133 விக்கெட்டுகள். எனவே, இவரின் எதிர்காலம் பிரகாசமானது. ஆனால், இவர் தன்னை நிதானித்துக் கொள்ளவேண்டும் என்பதே உண்மை. இல்லா விட்டால், இள இரத்தங்கள் சமி, குல் போன்றவர்கள் இவரை ஓரங்கட்டிவிடுவார்கள்.

*இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் அணி விபரம் -*

| | |
|---|---|
| ரஷீட் லத்தீப் (அணித்தலைவர்) | பைசால் அத்தார் |
| யூசுப் யொகானா (உப தலைவர்) | அப்துர் நசாக் |
| மொகமட் ஹாபீஸ் | சாபிர் அஹமட் |
| தௌபிக் உமர் | சொஹெய்ப் அக்தார் |
| வைசால் இக்பால் | மொஹமட் சமி |
| யூனுஸ் கான் | உமர் குல் |
| சோஹெய்ப் மாலிக் | டேனிஸ் கனேரியா |
| யசீர் ஹமீட் | பயிற்றுநர் - ஜாவிட் மியன்டாட் |

**- நிர்மலன் -**

# அறிவதில் பாவமில்லை

100 மீற்றர் ஓட்டத்தில் 9.78 செக்கன் சாதனை நேரத்தைக் கொண்டிருப்பவர் ரிம் மொன்ட்கொமரி. இப்போது செய்தி அவர் பற்றியதல்ல. செய்தி கனடியன் ஒருவர் பற்றியது. மெக்சிகோவில் நடைபெற்ற தடகளப் போட்டியொன்றில் 100 மீற்றர் எனக்கே என்றார் மொன்ட்கொமரி. ஆனால், வென்றது கனடா வின் நிக்கலஸ் மக்ரோசொனாரிஸ். அதிலும் துயரம் என்னவென்றால், வென்றவர் எடுத்த நேரம் 10.03 செக்கன்கள். மொன்ட்கொமரி எடுத்த நேரம் 10.04 செக்கன். உலக சாதனை நேரத்துக்கும், முன் சொன்ன நேரத்திற்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. அடுத்து, பாரிஸ் தடக ளப் போட்டிகள் இருக்கின்றன. அங்கு மொன்ட்கொமரி என்ன செய்யப் போகின்றார். இது ஒருபுறம் இருக்க, பாரிஸ் தடகளப் போட்டிகள் யாருக்கும் இலகுவானதாக இருக்கப்போவதில்லை. எனினும், கிறீனின் பயிற்றுநர் பிரித்தானிய 100 மீற்றர் வீரர்கள் வரிசையாக அமெரிக்க வீரர்களைப் பயமுறுத்துகிறார்கள் என்கிறார். டுவெய்ன் சேம்பர்ஸ், டரன் கம்பெல், மார்க் லூயிஸ் ஆகிய பிரித்தானியர்கள் கதையையே மாற்றிவிடும் ஆற்றல் உள்ளவர்கள் என்கிறார். இவர்கள் எல்லோரும் ஏதோவொரு பதக்கம் மாறிமாறி எடுத்தவர்கள்தான். மேலும், சேம்பர்ஸ் பெரிதும் எதிர்பார்க்கப்படும் ஒருவராகிறார்.



சேம்பர்ஸ் - 'என்னாலும் முடியும்'

மொன்ட்கொமரி, கிறீன் இரு அமெரிக்கர் களையும் இவர் வீழ்த்தினால் ஆச்சரியம் இல்லை என்று நம்பப்படுகின்றது.




சொனாரிஸ் - 'நானே எதிர்பார்க்கவில்லை'

ஆனால், மொன்ட்கொமரி விட்டுக்கொடுக் கும் ஆளாகத் தெரியவில்லை. மெக்சிக்கோ வில் கனடிய வீரரிடம் தோற்றாலும், தான் யப்பானில் நடைபெறும் தடகளப் போட்டிக ளில் மொறிஸ் கிறீனைத் தோற்கடித்தே தீருவேன். அதுமட்டுமல்ல, பாரிஸ் சாம்பியன் ஷிப் போட்டிகளில் தங்கமும் வெல்வேன் என்கிறார். என்றாலும் - கிறீனின் பெயரைச் சாதனைப் பட்டியலில் இருந்தே இல்லாமற் செய்வேன் என்றளவில் மொன்ட்கொமரி கருத்துக் கூறுவது அநாவசிய மிதப்பு என்றே எண்ணத் தோன்றுகிறது.

சிட்னி ஒலிம்பிக்கில் பெண்களுக்கான 400 மீற்றர் தங்கம் வென்றவர் - அவுஸ்திரேலி யாவின் கெத்தி பிரிமேன். இவர் ஜுலை மாதம் பிரித்தானியாவில் நடைபெறவுள்ள தடகளப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளார். இவர் முன்னதாக அட்லாண்டா ஒலிம்பிக் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் பெற்றவர். தற்போது இவருக்குப் போட்டியாக இருக்கப் போகிறவர்கள் கற்றரின் மெரி, லீமக்கொனல், டொனா பிரேஸர் ஆகியோருடன் போட்டிபோடப் போவதைச் சவாலாக எதிர்நோக்குகிறார்.

தடகள விளையாட்டுச் செய்திகள் தற்போதே நிரம்ப வரத்தொடங்கிவிட்டன. எல்லோரும் தத்தமது திறமைகளை வளர்த்துக்கொள்ள அரும்பாடுபடுகிறார்கள். இவர்களின் இலக்கு எல்லாம் ஒன்றே ஒன்றுதான். அதுதான் 2004 ஓகஸ்டில் நடைபெற வுள்ள ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் விளையாட்டு ரசிகர்கள் எல்லோரும் இப்பொழுதிருந்தே சர்வ தேசத் தரம்வாய்ந்த வீர, வீராங்கனைகள் பற்றி அறிந்துகொள்ள வேண்டிய தேவையொன்றுள் ளது. ஏனெனில், பலர் கிரிக்கெட் தவிர்ந்த வேறெந்த விளையாட்டுத்துறை பற்றியும் அறிய விரும்பாதவர்களாகவும், அறியாதவர்களாகவும்- குண்டுச் சட்டிக்குள் குதிரையோடிக் கொண்டிருப் பவர்களாக இருக்கிறார்கள் என்பதும் உண்மை தானே.



பிரிமேன் - 'தங்கம் எனக்கே'

**- மாணிக்கம்.**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**
வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற. - *திருக்குறள்*

# நமது நோக்கு

## தேக்கத்திலிருந்து நகர்வை நோக்கி...

சமாதானப் பேச்சுக்களிலிருந்து விடுதலைப் புலிகள் தற்காலிகமாக விலகுவதாக அறிவித்ததன் பின்னர் உருவாகியிருக்கின்ற நிலைமை - விவகாரத்தை சர்வதேசத்தின் தீவிர கவனத்துக்குக் கொண்டு சென்றிருப்பதாகவே தெரிகிறது.

ஏற்கனவே - இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான முயற்சிகளில் நோர்வேயின் அனுசரணையாளர் பாத்திரமும், தொடர்ந்து சமாதானப் பேச்சுக்கள் உலகநாடுகளில் இடம்பெறத் தொடங்கியதும் - பிரச்சினையை சர்வதேசமயப்படுத்தியிருந்த நிலையில் -

விடுதலைப் புலிகளின் பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக இடைவிலகுவதாக விடுத்த அறிவிப்பும், உதவி வழங்கும் நாடுகளின் 'ரோக்கியோ' மாநாட்டில் பங்குபற்றுவதிலிருந்து தற்காலிகமாகப் புலிகள் விலகியதும் - சர்வதேச அரங்கில் ஏற்படுத்தியிருக்கின்ற உணர்வலைகள் - இனி சமாதான முயற்சிகள் நகர்ந்து செல்லக்கூடிய பாதையைத் தீர்மானிப்பதிலும் உதவப்போகின்றன என்பது வெளிப்படையானது.

இந்த வகையில் - வன்னியில் கடந்த சில நாட்களாக நடைபெற்றுவந்த முக்கிய சந்திப்புக்கள், சர்வதேச அளவில் - விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டின் நியாயத் தன்மையை, தெளிவை ஏற்படுத்தத் தொடங்கியிருப்பதாகவே சில தகவல்களும் வெளிவர ஆரம்பித்துள்ளன.

விடுதலைப் புலிகளின் தலைவரைச் சந்தித்த ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி - தனது சந்திப்பின் மூலம் ரோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகளை பங்கேற்கச்செய்ய இணக்கம் கண்டுவிட முடியும் என்ற எதிர்பார்ப்புடனேயே இருந்தார்.

எனினும் - விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டைத் தெளிவாக்கிய பின்னர் - அகாஷி புலிகளை அழைத்துவிடலாமென்ற எதிர்பார்ப்பில் ஏமாற்றமடைந்து - 'சமாதான முட்டுக்கட்டையைக் களைவதில் தோற்றுவிட்டேன்' என கொழும்பு திரும்பியதும் தெரிவித்தார்.

ஆனால் - ஜப்பானுக்குத் திரும்புவதற்கு முன்னர், நிலைமையைச் சரிவரப் புரிந்துகொண்டவராக - விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அங்கீகரிப்பவராக -

'இலங்கையில் சமாதானப் பேச்சுக்கள் தேக்கநிலை அடைந்தமைக்கு இரண்டு காரணங்கள் உண்டு என்பதைக் கண்டறிந்துள்ளோம். உயர் பாதுகாப்பு வலயத்தினால் மீள்குடியேற்றத்தில் ஏற்பட்ட பிரச்சினையும், சிறான் செயற்பாடு முடங்கியுள்ளதால் ஏற்பட்ட சிக்கலுமே பேச்சுக்கள் நகர முடியாமல் இருப்பதற்கு காரணங்கள்' என அகாஷி பேசியிருக்கிறார்.

ஆனாலும் - ரோக்கியோ மாநாட்டில் பங்குபற்றுவதான இறுதிமுடிவை எதிர்வரும் பதினான்காம் திகதிக்கு முன்னர் இரண்டு தரப்பும் உறுதிப்படுத்த வேண்டும் என்ற தனது இலக்கையும் அவர் வெளிப்படுத்தத் தவறவில்லை.

எதுவாக இருந்தாலும் - அகாஷியின் இக்கருத்துக்கள், சர்வதேசம் உண்மைநிலையை உணரத் தலைப்பட்டதான சமிக்ஞையாக இருப்பதையே காட்டுகின்றன என்பதில் சந்தேகமிருக்கப் போவதில்லை.

இதேவேளை - நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிஸனும் - சமாதான முயற்சிகளில் சர்வதேச சமூகம் தொடர்ந்தும் ஆதரவளிக்க வேண்டுமெனவும் - இக்காலப்பகுதியில் அனைத்துத் தரப்புக்களும் - தமது பங்கு குறித்து ஆராயவும், மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க என்ன செய்யலாம் என்பதைச் சிந்திக்கவும் நேரத்தைச் செலவிட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

சர்வ்தேச சமூகத்தின் இத்தகைய அபிப்பிராயங்கள்- பேச்சுக்கள் தடைப்பட்டிருப்பதற்கான காரணிகளை அகற்றுவதாக முனைப்புப் பெறுமானால், அது வெற்றியளிக்கும் பட்சத்தில் - தமிழர் தரப்பினரிடம் மீண்டும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பக் கூடிய வாய்ப்புக்களை சர்வதேசம் பெற்றுக்கொள்ளலாம்.

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதும், உதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப் புலிகளைப் பங்கேற்க வைப்பதிலும் ஆர்வம் கொண்டுள்ள சர்வதேசம் -

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்டது போல - ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அரசாங்கத்திடம் இருந்து மேற்கொள்ள அழுத்தங்களைக் கொடுக்குமானால், அவை செயலாற்றல் பெறும் பட்சத்தில் - முடங்கிக்கிடக்கும் அமைதி முயற்சிகளை மீண்டும் தொடரச் செய்யும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும்.

'இனி எல்லாமே அரசின் கையில்' என்பதை விடுதலைப் புலிகள் உறுதியாக அறிவித்ததன் பின்னர் - மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளின் திசையும் விடுதலைப் புலிகளால் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதை உணர்ந்து சர்வதேசம் செயற்படும் பட்சத்திலேயே - தேக்கநிலை நகர்வை நோக்கியதாகும்.

# கைகலப்பதும், கைகுலுக்கிக் கொள்வதும் உண்மையான வீரருக்கு மட்டுமே சாத்தியம்!

## ஒரு பகிரங்கக் கடிதம்

### சிறிலங்கா இராணுவத்தினர் அறிவது!

**வேட்**டை நாய் ஒன்று பூனை ஒன்றைத் துரத்திக்கொண்டு போனது. அந்தப் பூனை ஓடித்தப்பிவிட்டது. மறுநாளும் பூனையைக் கண்டதும் அந்த வேட்டை நாய் கலைக்கத் தொடங்கியது. இப்போது அந்தப் பூனை திரும்பி நின்று வேட்டை நாயைப் பார்த்துச் சீறியது. தனது கால் நகங்களால் விறாண்டத்தயாரானது... வேட்டை நாயின் முகத்தை நோக்கிப் பாய்ந்தது... வேதனை தாங்கமுடியாத வேட்டை நாய் நகக் கீறல்களுடன் வெட்கிச்சென்றது...

ஒரு வேட்டை நாய்க்குப் பூனையைவிடப் பலம் அதிகம். அதனிடம் வலிமை அதிகம். உடல்வாகு பூனையைவிட வேட்டை நாய்க்குப் பெரிது. பூனையைப்போல் ஐந்து, ஆறு மடங்கு அதிக உடம்பையும் கொண்டது வேட்டை நாய். பூனையைவிட வேட்டை நாய் நன்றாக, வேகமாக ஓடும். வேட்டை நாய் இன்னும் பல வகைகளில் பூனையைவிட வலிமையானது..

இருந்தும் அந்த வேட்டை நாயால் ஏன் பூனையைப்



பிடிக்கமுடியவில்லை? வேட்டைக்கென்று கட்டி வளர்க்கப்பட்டு, அதற்கென்று பயிற்சிகள் வழங்கப்பட்ட நாயால் ஏன் பூனையைக் கொல்லமுடிவில்லை? வேட்டை நாய்க்கு ஒரு வாழ்க்கை உண்டு. அந்த வாழ்க்கைக்கு எதுவித பாதிப்பும் இல்லை. ஆனால், பூனையின் உயிர்வாழ்தல் என்பது வேட்டை நாயின் கையில் வந்துவிட்டதும், பூனைக்கு அது உயிர்வாழ்தல் பிரச்சினையாகிவிட்டது.

பூனை உயிருக்குப் பயந்து ஓடியது. பிடிபட்டால் வாழ்க்கை அஸ்தமித்துவிடும் என்று தெரிந்ததால்தான் அப்படி ஓடியது. தனது சுதந்திரமான வாழ்க்கை முடிந்துவிடக்கூடாது என்பதற்காக ஓடியது. இதனால்தான், பூனையால் வெல்ல முடிந்தது. இனியும் ஓடமுடியாது என்றநிலை வந்ததும், அது திருப்பித் தாக்கத் தொடங்கியது. நாயைத் திருப்பித் தாக்கினால்தான் தன்னால் உயிர் வாழமுடியும் என்றநிலை பூனைக்கு. அதனால்தான் பூனை - புலியாக மாறித் தாக்கியது.

ஆனால், நாயின்நிலை அப்படியல்ல. அதற்கு எலும்புத் துண்டுபோடப் பலர் உள்ளனர். பூனையைக் கொன்றுதான் உயிர் வாழவேண்டும் என்றநிலை அதற்கு இல்லை. தான் பலசாலி என்ற நினைப்பில் வந்த அதிகார வெறியும், ஆணவமுமே அதனைப் பூனையை அடக்கவும், துரத்தவும் செய்தது. அதனால்தான் அது தோல்வியைக் கண்டுகொண்டது.

இந்தவாரம் இடம்பெற்ற இரு சம்பவங்கள் பூனை - நாயின் போராட்டத்தை எனக்கு ஞாபகப்படுத்தியது.

சிறிலங்கா இராணுவமாகிய உங்களை நாயாகவும், தமிழ் மக்களைப் பூனையாகவும் நினைக்கத் தோன்றுகிறது.

ஆனையிறவு முகாம் வீழ்ச்சிக் கொண்டாட்டங்கள் அண்மையில் நடைபெற்றன. உங்களைப் போன்ற எத்தனையாயிரம் இராணுவத்தினரைக் கொண்டுவந்து சிறிலங்கா அரசு அந்த ஆனையிறவு முகாமில் குவித்து வைத்திருந்தது. கடந்த இரு தசாப்தங்களாக அந்த வழியால் சென்ற எத்தனையாயிரம் தமிழ் இளைஞர்கள் உங்களின் - அந்த முகாம் படையினரினால் கைதுசெய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டனர். உலகில் உள்ள மிகப்பெரிய வல்லரசான அமெரிக்காவின் விசேட நிபுணர்களால் - ஒவ்வொரு படையினருக்கும் 15 லட்ச ரூபா வரையான செலவில் பயிற்சியளிக்கப்பட்டு, அமெரிக்கப் படை அதிகாரிகளின் நேரடிக் கண்காணிப்பில், வழிநடத்தலில் வைக்கப்பட்டிருந்த படையணிதான் அந்த ஆனையிறவுப் படையணி. இலங்கையின் பத்துவருட வருமானத்தைவிட அதிகளவு பணச்செலவில் வாங்கப்பட்ட கனரக ஆயுதங்கள் கொண்டுவந்து குவிக்கப்பட்டிருந்த இடம்தான் அந்த ஆனையிறவு. அதனை விடுதலைப் புலிகள் ஒரேவாரத்தில் தாக்கியழித்து உலகப் போராட்ட சரித்திரத்தில் சாதனை புரிந்தனர் என்றால் அதற்கு காரணம் என்ன? அதுதான் நான் மேலே சொன்ன பூனை - நாய் சம்பவம்.

அதேசமயம், கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தையும் புலிகள் சில மணிநேரத்தில் தகர்த்தனர். இரண்டுக்கும் போடப்பட்ட உயர்பாதுகாப்பு வலயங்கள் உங்களைக் காத்ததா? இந்த ஆனையிறவு முகாமையும், கொழும்பிலுள்ள விமானப்படை முகாமையும் - விடுதலைப் புலிகள் தாக்கியழித்ததன் பின்னர் - கேவலம் தற்போதுள்ள உங்கள் உயர்பாதுகாப்பு வலய முகாம்கள் எம்மாத்திரம்.

ஏற்கனவே பலாலி முகாமிலிருந்து தப்பியோட இந்தியாவின் உதவியை நாடியவர்கள்தானே நீங்கள்...

இந்தநிலையில் இன்னமும் எதற்காக உயர்பாதுகாப்பு வலயங்களைவிட்டு வெளியேற நீங்கள் பின்நிற்கிறீர்கள்? இந்த ஆனையிறவு வெற்றிவிழா உங்களுக்கு ஒரு எச்சரிக்கையாக அமையவேண்டாமோ.

ஒன்று தெரியுமா? ஆனையிறவில் இறந்து - சந்திரிகாவால் வாங்க மறுக்கப்பட்ட உங்கள் சிப்பாய்களின் சடலங்களைப் - புலிகள் மரியாதையுடன் அடக்கம் செய்தனர். அதனை அண்மையில் வன்னியில் நடைபெற்ற விளையாட்டு விழாவிற்கு வந்த அம்பாறை பொலிஸார் சென்று பார்த்து அஞ்சலி செலுத்தியிருக்கின்றனர்.

வன்னியில் நடைபெற்ற விளையாட்டு விழாவிற்கு வந்தவர்களுக்குக் கிடைத்த மரியாதை அது. ஆனால், களுவாஞ்சிக்குடியில் நடைபெற்ற விளையாட்டு விழாவில் தமிழ் மக்களுக்கு நீங்கள் கொடுத்த பரிசு - அடி, உதை. ஒரு சாதாரண கயிறுழுத்தல் போட்டியில் வெற்றிபெற முடியாத நீங்கள், அந்தக் கோபத்தை மக்கள்மீது காட்டியிருக்கின்றீர்கள். கேவலம்...!

கட்டுநாயக்க விமானப் படைத் தாக்குதலில் ஒரு சிங்களப் பொதுமகனுக்கும் காயம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத் தப்பியோடக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தும், தமது உயிரை மாய்த்துக்கொண்ட புலிகள் எங்கே? நீங்கள் எங்கே?

கோட்டை முகாம் பொறுப்பதிகாரியாக இருந்த கொத்தலாவல - விடுதலைப் புலிகளைப் பற்றிக் கூறியதுதான் ஞாபகம் வருகின்றது. விடுதலைப் புலிகளிடம் ஸ்போட்ஸ்மன்ஷிப் இருக்கின்றது என்றார். யாழ். கோட்டை முகாம் படையினர் உணவின்றிப் புலிகளின் முற்றுகைக்கு உட்பட்டிருந்தபோது- வெள்ளைக் கொடியுடன் உணவு கொண்டுவந்த உலங்குவானூர்தி ஒன்றை, அப்போதைய யாழ். தளபதி கிட்டு- கோட்டை முகாமில் இறங்க அனுமதித்திருந்தார். அதனைக் குறித்தே கொத்தலாவல அவ்வாறு தெரிவித்தார். வீரர்களின் பண்பு அது. அது சண்டையிலாகட்டும், விளையாட்டிலாகட்டும். அதனால்தான் தமிழில் போராளிகளையும், விளையாட்டு வீரர்களையும் நாம் வீரர்கள் என்கிறோம்.

அதாவது, மல்யுத்தச் சண்டைக்கு முன் கைகுலுக்குவதற்கும், சண்டைக்குப்பின் சமாதானமாகக் கைகுலுக்குவதற்கும் வித்தியாசம் உண்டு. உண்மையான வீரர்களால் மட்டுமே இரண்டும் சாத்தியம். புலிகளால் அது முடிந்தது. உங்களால் விளையாட்டுகளுக்குப் பின்னும் சரி சண்டைக்குப் பின்னும், சரி இன்னமும் கைகுலுக்க முடியவில்லை.

யாருக்காக இன்னும் முஷ்டியை மூடி வைத்துள்ளீர்கள்... யாருக்காக நீங்கள் உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து பின்வாங்கத் தயங்குகின்றீர்கள். உங்கள் குடும்பத்தினருக்காகவா? இல்லை உங்கள் நலனில் அக்கறையுள்ளவர்களுக்காகவா? ஆனையிறவுச் சண்டையில் இறந்த உங்கள் சகோதரப் படையினரின் சடலங்களை வாங்க மறுத்த ஜனாதிபதி சந்திரிகாவின் அரசியல் சுயநலத்துக்காகவா? லண்டனில் தனது பிள்ளைகளைப் படிக்கவைத்துள்ள சந்திரிகாவும், ஜேவி.பி தலைவர் சோமவன்சவும் உங்கள் பிள்ளைகளின் நலனுக்காக அரசியல் நடத்தவில்லை...!

உங்கள் பிள்ளைகளைப் பற்றிக் கொஞ்சம் சிந்தியுங்கள்...! உங்கள் மனைவி பிள்ளைகளைப் பற்றிச் சிந்தியுங்கள்...!

நீங்கள் இவ்வளவு சீண்டியும் புலிகள் உங்களை இன்னமும் சீண்டவில்லை... சீறக்கூடவில்லை... ஏன் தெரியுமா? உங்களைப் பார்த்தால் பயம் வருவதில்லை. கோபம்கூட வருவதில்லை. மாறாக உங்களைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கின்றது,

காரை. சுந்தரம்பிள்ளையின் கவிதைதான் ஞாபகத்துக்கு வருகின்றது.

'வடமராட்சித் தாலிக்கொடியை நம்பி
காத்திருந்தாள் பொடிமெனிக்கே வெம்பி'
'வடமராட்சிக் கொடியுமில்லை,
புஞ்சிபண்டா 'பொடி'யுமில்லை.'
என்றார் அவர். புரிந்தால் சரி...

*இப்படிக்கு,*
*வாசகன் ரட்ணதுரை (கனடா)*

## வீதி ஒழுங்குகளை மீறுவோரால் பொதுமக்களுக்கு அசௌகரியம்

வீதி நடைமுறைகளைப் பின்பற்றாத வாகனச் சாரதிகளாலும், பாதசாரிகளாலும் யாழ். நகரப்பகுதிகளில் மக்கள் பயணம் செய்யமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

ஏ-9 பாதை திறந்த பின்பு, யாழ்ப்பாணத்துக்குப் பெருமளவு வாகனங்கள் வருவதுடன், பெரும் எண்ணிக்கையான மக்களும் வந்து போகின்றனர். இதனால், யாழ். நகரப்பகுதி எப்போதுமே மக்கள்கூட்டம் நிரம்பிக் காணப்படுகிறது.

வாகனங்களில் செல்வோா வீதி நடைமுறைகளைப் பின்பற்றாது மிகவேகமாக வாகனங்களைச் செலுத்துகின்றனர். அத்துடன், சில பாதசாரிகள் வாகனங்கள் செல்லும் நடுவீதியில் பாதைகளை மறைத்துகொண்டு நடந்து செல்கின்றனர். இது போன்ற நடவடிக்கைகளாலே வீதி விபத்துக்கள் அதிகமாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரா)

## வங்கிவட்டி அறவீடு ஒரு வீதத்தால் குறைவு

(கொழும்பு)

வங்கிகளில் அறவிடப்படும் வட்டி, நேற்றுமுதல் ஒரு சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாகப் பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மத்தியவங்கியின் வருடாந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தபோதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் பொருளாதாரம் ஸ்திரநிலையில் இருந்ததாலே, இந்த வட்டிவீதம் குறைக்கப்பட்டுள்ளது. இது குறித்து மத்திய வங்கி உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது.

# மோதல்களை நேருக்குநேர் எதிர்கொள்ள தயாராகிவிட்ட சந்திரிகாவும் ரணிலும்

## தெற்குத் திசையினிலே.....

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

**தெ**ன்னிலங்கை அரசியலில் பாரிய நெருக்கடி எதிர்நோக்கப்படுகிறது. எனினும்- ஒன்றுமே நடக்காததைப்போல, அரசாங்கம் நிலைமையை அமைதியாகக் கொண்டுசெல்ல எத்தனிக்கிறது. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்குள் இருந்துவந்த உட்பூசல்கள் கடந்த ஒரு வாரமாக அமைதியடைந்துள்ளன.

எனினும், அந்த முன்னணி இனப்பிரச்சினைத் தீர்வு நகர்வில் பாரிய சவாலை எதிர்நோக்கிநிற்கிறது. முன்னைய அரசாங்கங்களும், அரச தலைமைகளும் மேற்கொண்ட நடவடிக்கையைப்போலவே ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமும் இனப்பிரச்சினைத் தீர்வை நோக்குகிறதா? என்ற ஐயம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஏற்படவே, அவர்கள் தகுந்த வேளையில் தமது அரசியல் காய் நகர்த்தலை மேற்கொண்டுள்ளனர்.

இது அரசாங்கத்தைப் பொறுத்தவரை பாரிய நெருக்கடிநிலையைத் தோற்றுவித்துள்ளது.

எனினும், வெளிநாடுகளின் ஆதரவு தமக்குக் கிடைப்பதாக வெளியில் காட்டிக் கொண்டு, அரசாங்கம் தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. எதிர்காலத்தில் அபிவிருத்திக்குத் தேவையான நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அது முனைப்பைக் காட்டி வருகிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில் வெளிநாட்டவர்களின் ஆதிக்கம மிகவும் அபாயகரமான நிலைக்கு வந்துவிட்டதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணி குற்றஞ்சுமத்தியுள்ளது. அமெரிக்கா முதல் மாலைதீவு வரையிலான நாடுகளின் தலைவர்களும், அதிகாரிகளும் ஒவ்வொரு மாதமும் இலங்கைக்கு விஜயம் செய்கின்றனர். முதலீடுகள் என்ற பெயரில் இந்தியாவின் பாரிய நிறுவனங்கள் யாவும் இலங்கையில் காலூன்றி நிற்கின்றன.

இலங்கையின் அரசியலில் யார் கூடிய செல்வாக்கைச் செலுத்துவது என்ற போட்டியில், மேற்கத்தைய நாடுகளும், அண்டைய நாடுகளும் இலங்கைக்குள் தமது தலையீடுகளை அதிகரித்து வருகின்றன. இந்த தலையீடுகளுக்காக அந்த நாடுகள்-இலங்கையின் இனப்பிரச்சினையைக் காரணங்காட்டி நிற்கின்றன. அமெரிக்காவைப் பொறுத்தவரை ஆயுதப்பயிற்சி மற்றும் சுதந்திர வான்பரப்பு உடன்படிக்கை என்பவற்றின் மூலம் இலங்கையை ஆக்கிரமித்து விட்டது என எதிர்ககட்சி குற்றஞ்சாட்டியது.

செப்ரெம்பர் 11 ஆம் திகதி நியூயோர்க் உலக வர்த்தக மையம் தாக்கப்பட்டதன் பின்னர், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல்கள், இலங்கைக்கு அந்த நாட்டின் மீது கவர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது. நோர்வேயைப் பொறுத்தவரையில் - இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சிறந்த மத்தியஸ்தத்தை முன்னெடுத்துச் செல்கிறது. எனினும், அந்த நாட்டுக்கும் அமெரிக்காவின் அழுத்தங்கள் இருப்பதாகவே கருதப்படுகிறது.

ஜப்பான் நாடு - வீழ்ந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் இலங்கைக்குள் ஏற்கனவே பிரவேசித்திருந்தாலும், தற்சமயம் இனப்பிரச்சினையுடன் இணைந்து நிதி உதவிக்கொள்கையில் அந்த நாடு ஈடுபட்டுள்ளது. இதனடிப்படையிலேயே அந்த நாட்டின் சமாதான விசேட தூதுவர் யசுசி அகாஷி - வன்னிக்குச்சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்தார். எனினும், அந்த சந்திப்பின் பின்னரும் தெளிவற்றதொரு நிலை நிலவுகிறது. ஜப்பான் தமது நிதியுதவி என்ற நோக்கத்தை மாத்திரம் முன்னெடுத்து, தமிழர் பிரச்சினையை அணுகமுடியாது என்பதை இது வெளிக்காட்டியுள்ளது.

**த**மிழீழ விடுதலைப் புலிகள் - தமிழர்களின் இயல்பு வாழ்க்கையை வலியுறுத்தி, சமாதானப் பேச்சிலிருந்து தற்காலிகமாக வெளியேறியநிலையில், அதனைத் தென்னிலங்கைக் கட்சிகள் பல்வேறுகோணங்களில் விமர்சித்தன. பொதுஜன ஐக்கிய முன்னணி- தமிழீழ விடுதலைப் புலிகளின் முடிவு பிழையானது எனத் தெரிவித்த அதேநேரம், அந்த முன்ன ணியின் புதிய கூட்டணிக்கட்சியான மக்கள் விடுதலை முன்னணி - தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை வித்தியாசமான கோணத்தில் விமர்சித்தது.

போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவினர்- தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளை அங்கீகரிக்கக்கோரி, முன்வைத்த பரிந்துரை- தென்னிலங்கையில் பாரிய உணர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த உணர்வலைகளைத் திசை திருப்புவதற்காகவே தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதான முயற்சியிலிருந்து தற்காலிகமாக விலகுவதாக அறிவித்துள்ளனர் என மக்கள் விடுதலை முன்னணி கூறியது.

ஜே.வி.பியின் கருத்து உண்மையானால், ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி



மகிழ்ச்சியான உரையாடலில் சொல்ஹெய்ம் - ஹெல்கிஸன் - சந்திரிகா - ரணில்

வன்னி சென்று, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரைச்சந்தித்தபோது, அவர் அகாஷியின் வேண்டுகோளை ஏற்று 'ரோக்கியோ' மாநாட்டில் பங்கேற்பதாகக் கூறியிருக்கவேண்டும்.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் - தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தமை மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரத்தையும் - விமல் வீரவன்சவின் பிரசாரத்தையும் தவறானதெனக் காட்டியுள்ளது. இலங்கை அரசியலைப் பொறுத்தமட்டில் - சிங்கள மக்கள் இன்னமும் அரசியல்வாதிகளின் கொடூரப் பேச்சுக்களையும், கருத்துக்களையும் பொழுதுபோக்காகக் கருதும் நிலைக்கு வந்துவிட்டனர்.

இதற்கு மற்றும் ஒரு உதாரணம்தான், தற்கொலைப்படை ஒன்றை அறிமுகப்படுத்தப் போவதாகச் சிஹல உறுமய கூறிய கருத்தாகும். முதல் நாளன்று சிஹல உறுமய - ஊடகங்களுக்கு அனுப்பிய தகவலில் - அடுத்த நாள் தற்கொலைப் படையினை அமைக்கப்போவதாகத் தெரிவித்தது. ஆனால், அதன் மேலதிக வாக்கியத்தில் - நிபந்தனையுடனான யுத்தம் ஒன்றுக்குக்காகவே இந்தத் தற்கொலைப் படையினரை அறிமுகப்படுத்தப் போவதாகக் குறிப்பிட்டிருந்தது. இது சிங்கள மக்கள் மத்தியில் கவர்ச்சிப் பிரசாரம் ஒன்றை முன்னுணர்த்திச் செய்யப்பட்டது என்பதில் மறுப்பில்லை.

**த**மிழீழ விடுதலைப் புலிகளுக்கு- வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் நிதியுதவி செய்கிறார்கள். அதனைக் கட்டுப்படுத்தினால், புலிகள் இலங்கையில் மேற்கொள்ளும் தாக்குதல்கள் குறைவடையும் என முன்னாள் ஆளுங்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி எண்ணியது. இதனடிப்படையிலேயே, அந்தக் கட்சி முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைப் பயன்படுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகளைச் சில நாடுகளில் தடைசெய்ய வழிமுறைகளை மேற்கொண்டது. இது பழைய தகவல். இப்போது புதிய தகவல் என்னவென்றால், பொதுஜன ஐக்கிய முன்னணியும் அதே குற்றச்சாட்டைச் சுமத்திவந்த மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சிஹல உறுமய என்பனவும் நிதி திரட்டலைச் செய்ய ஆரம்பித்ததுதான்.

சமஷ்டி தொடர்பாக அரசாங்கம் வெளிநாட்டு விஜயங்களை ஒழுங்கு செய்த வேளையில், அதில் நாடாளுமன்ற உறுப்பினர் நிலையில் பங்கேற்ற சரத் அமுனுகம மற்றும் நிமால் சிறிபால டீ சில்வா ஆகியோர் லண்டனிலும், பிரான்ஸிலும் - சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகங்களை ஸ்தாபித்து, தமது கட்சிக்கு நிதியைச் சேகரிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

அதேபோல, லண்டனில் இருக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க பெருமளவு நிதியை இலங்கையில் தமது கட்சி நடவடிக்கைகளுக்காகத் திரட்டிவருகின்றார். இதனைக் கொண்டே மக்கள் விடுதலை முன்னணி தென்னிலங்கையின் சிறிய சம்பவத்தைக் கூடப் பெரிதுபடுத்தி, சுவரொட்டிகளை ஒட்டி வருகிறது எனச் சிங்கள மக்கள் மத்தியில் கருத்துக்கள் வெளிப்பட்டுள்ளன. இவ்வாறு பாரிய நிதியுதவிகள் கிடைப்பதை மறைப்பதற்காகவே இன்னமும் அந்த முன்னணி வீதிகளில் தமது உறுப்பினர்களைப் பயன்படுத்தி உண்டியல்கள் மூலம் நிதிசேகரிப்பை மேற்கொள்வதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

சிஹல உறுமயவைப் பொறுத்தவரையில் தேர்தல் காலத்தைக் காட்டிலும் அதன்- செல்வாக்கு இப்போது குறைந்துவிட்டது. எனவே, அதன் வெளிநாட்டு நிதி சேகரிப்பிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எனினும், இந்த நிதியைக்கொண்டே அவ்வவ்போது ஊடகவியலாளர் மாநாடுகளை அந்தக்கட்சி நடத்துவதுடன், நடைமுறைக்கு மாறான அரசியல் கருத்துகளைப் பேசிவருவதாகச் சிங்கள மக்கள் கருதுகின்றனர்.

**கொ**ழும்பு அரசியலில் பிந்திய அம்சமாக அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான இந்திய மேஜர் ஜெனரல் சதீஷ் நம்பியாரின் அறிக்கை அமைந்திருந்தது. மேஜர் ஜெனரல் சதீஷ் நம்பியார் கடந்த சுமார் 5 மாதகாலமாக உயர்பாதுகாப்பு வலய விடயத்தில் முக்கியமானவராகக் கருத்தப்பட்டவராவார். அவ்வாறு கருதப்பட்ட மேஜர் ஜெனரல் சதீஷ் நம்பியாரின் அறிக்கை தற்சமயம் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாகத் தமிழீழ விடுதலைப புலிகளும், படைத்தரப்புமே முழுமைக் கருத்தைத் தெரிவிக்கும் முதன்மையைப் பெற்றிருக்கின்றன. ஆனால், அதற்கு முன்னரே பொதுஜன ஐக்கிய முன்னணி தனது கருத்தை கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டது. தமது கருத்து பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், இந்திய அரசிற்கும் இடையில் தற்சமயம் நிலவும் உறவை பாதித்துவிடக்கூடாது என்ற நோக்கிலேயே பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதற்காக அவர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்குத் தீர்வைக் கூறுவதற்கு, இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட- சதீஷ் நம்பியார் மற்றும் முன்னாள் கடற்படை அதிகாரி பி.ஜே. ஜேக்கப் ஆகியோர் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளெனினும் அவர்களை இந்தியாவின் பிரதிநிதிகளாகக் காட்டுவதற்கு இலங்கை அரசாங்கம் முயல்வதாகவும் சரத் அமுனுகம குற்றஞ்சுமத்தியுள்ளார். இதன் பின்னர் அவர் சதீஷ் நம்பியாரின் அறிக்கையில் குறைகண்டுள்ளார். இலங்கை இராணுவத்தினரின் கருத்துக்களைத் திருத்தியமைப்பதற்கு சதீஷ் நம்பியாருக்கு இருக்கும் அதிகாரம் குறித்தும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். இதேபோல மக்கள் விடுதலை முன்னணியும், சிஹல உறுமயவும் இந்தியாவின் செல்வாக்கைத் தற்சமயம் எதிர்பார்ப்பதால், சதீஷ் நம்பியாரின் அறிக்கை தொடர்பாக அவதானமான கருத்தையே வெளியிட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

**க**டந்த வாரம் நாடாளுமன்றம் கூடிய வேளையில், பல்வேறு கட்சிகளும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தின. இவை இன்றைய சமாதான முயற்சியில் கட்சிகளின் 'நாடி பிடிப்பு' என்ற அடிப்படையில் அமைந்திருந்தன. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளரும், தற்போதைய அஷ்ரப் காங்கிரஸின் உறுப்பினருமான அமைச்சர் ஏ.எல்.எம் அதாவுல்லா, வடக்கு - கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்ட வேண்டும் என வலியுறுத்தினர். எதிர்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ வழமைபோலவே அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளைக் குறைகூறிப் பேசினார்.

**இ**து இவ்வாறிருக்க - ரணிலின் அரசாங்கத்திற்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான சுமார் 11/2 வருட முறுகல் தொடர்பில் தீவிரநிலை ஒன்று தற்சமயம் தோன்றியுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்தது முதலே, ஜனாதிபதி தனது அதிகாரங்களைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் முனைப்புக்காட்டி வந்தார். எனினும, பல்வேறு சந்தர்ப்பங்களில் அந்த முயற்சி கைகூடவில்லை. ஏற்கனவே, பாதுகாப்பு அமைச்சு, அவசரசேவைகள் அமைச்சு மற்றும் தகவல்துறை அமைச்சு எனப் பல்வேறு அமைசசுக்களைத் தமது நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்திப் பொறுப்பேற்கப் போவதாக ஜனாதிபதி அச்சுறுத்தல் விடுத்துவந்தார். ஆனால், அவ்வாறான செயற்பாடு ஒன்று மக்கள் போராட்டத்திற்கு வழிவகுக்கலாம் என்ற அச்சம் மிகுதியால், ஜனாதிபதி தனது நடவடிக்கைகளை மட்டுப்படுத்திவந்தார்.

இந்த நிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் அவர் மிலிந்த மொறகொடவின் அமைச்சின்கீழ் இயங்கும், அபிவிருத்தி லொத்தர் சபையைத் தமது அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவந்தார். இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுமெனவும் அவர் அறிவித்திருந்தார். விஞ்ஞான தொழிநுட்ப மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் இயங்கும் அபிவிருத்தி லொத்தர் சபையின் மூலம் இலாபம் கிடைப்பதால், அவற்றை ஜனாதிபதியின் நிதியத்திற்கு மாற்றுவதற்காகவே இந்த நடடிவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கூறுகின்றார்.

ஜனாதிபதி நிதியத்தின் மூலமே மகாபொல மற்றும் அவசர நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஜனாதிபதி இந்த நடவடிக்கை மூலம் - பிரதமர் ரணில் விக்கிரசிங்கவின் அரசாங்கத்திற்கு ஆரம்ப அச்சுறுத்தலை விடுத்திருந்தார். எனவே, பல்வேறு பிரச்சினைகளுக்குள்ளும் சிக்கியுள்ள பிரதமரின் தலைமையில், அரசாங்கம் - ஜனாதிபதியின் சவாலை முறியடிக்கத் திட்டமிட்டுள்ளது.

இதன் முதற்கட்டமே அரசாங்க அச்சகத் திணைக்களம் சீல் வைத்து மூடப்பட்டமை ஆகும். அபிவிருத்தி லொத்தர் சபையைக் கையேற்றமை தொடர்பில் ஜனாதிபதி வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதாகக் கூறினாலும், அது இன்னும் இடம்பெறவில்லை. இந்த நிலையில் அந்த வர்த்தமானி அறிவித்தல் அச்சிடப்படுவதைத் தடுக்கும் வகையிலேயே தகவல்துறை அமைச்சின் அரசாங்க அச்சகத்திணைக்களம்- அரசாங்கத்தினால் மூடப்பட்டுள்ளது. அதேநேரம் அரசாங்கம் - ஜனாதிபதிக்கு எதிராக முதன்மைப் போராட்டம் ஒன்றுக்குத் தயாராகும் வாய்ப்பை எதிர்பார்க்கின்றது. ★

---

# அஞ்சல் அலுவலகமின்றி அவதியுறும் தென்மராட்சி கிழக்குப் பகுதி மக்கள்

தென்மராட்சிக் கிழக்குப் பகுதியில் குடியேறியுள்ள மக்கள் - தமக்குரிய பொதுசன மாதாந்த உதவிப்பணத்தையும் கடிதங்களையும் பெறுவதற்காக, பருத்தித்துறையில் இயங்கும் எழுதுமட்டுவாள் உப அஞ்சல் அலுவலகத்திற்கு பலத்த சிரமத்தின் மத்தியிலேயே சென்றுவரவேண்டியுள்ளதாகப் புகார் தெரிவித்துள்ளனர்.

இதனால் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாகப் பருத்தித்துறையில் இயங்கிவரும் எழுதுமட்டுவாழ் உப அஞ்சல் அலுவலகத்தைக் கொடிகாமத்தில் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தபால் திணைக்களத்திடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் - முகமாலை, கிளாலி, எழுதுமட்டுவாள் பகுதிகளைச் சேர்ந்த பெருமளவிலான மக்கள் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக தென்மராட்சிப் பகுதியிலேயே வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உலக இந்து மாநாட்டின் நேற்றைய மகளிர் அரங்கிலிருந்து...





யாழ்.நகரில் நேற்று நடைபெற்ற உலக இந்து மாநாட்டின் மகளிர் அரங்கில் -தலைமையுரையாற்றும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸை முதலாவது படத்திலும் 'மகளிர் வாழ்வியலில் வழிபாடு' என்னும் தலைப்பில் உரையாற்றும் திருமதி நாச்சியார் செல்வநாயகத்தை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்ட ஏனைய கருத்துரையாளர், கட்டுரையாளர்களை மூன்றாவது படத்திலும் காணலாம்.





மாநாட்டில் கலந்துகொண்ட பேராசிரியர்கள் சிவலிங்கராஜா, சண்முகதாஸ், மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா திலகநாயகம்போல் ஆகியோரை முதலாவது படத்திலும், மாநாட்டுக்கு வருகைதந்திருந்த மகளிரை இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் காணலாம். (படங்கள்: F.X.சுதர்சன்)

# 'அம்மாவின்ர மனம் நோகாமல் பிள்ளையள் நடக்கவேணும்!'

இன்றைய அன்னையர் தினத்தை முன்னிட்டு, எமது செய்தியாளர் - பொதுமக்கள் சிலரைச் சந்தித்து, இத்தினம் தொடர்பாக அவர்களிடம் கருத்துக்கள் கேட்டபோது....

**க. மகாலிங்கம்,**
**கொக்குவில், மேற்கு.**



பெரும்பாலும், எனது வாழ்க்கையில் நான் ஏதாவது காரியத்தைச் செய்யப்போனா, அது எனது அம்மாவுக்குப் பிடிக்காவிட்டா - தடுக்க மாட்டா. ஆனால், அவா சில அறிவுரைகளைச் சொல்லுவா. அதையும் மீறி நான் அந்த வேலையைச் செய்யப்போனா, அது வெற்றிபெறாமலே முடிந்துவிடும்.

இதிலிருந்து நான் ஒன்றை அவதானிச்சன். தாயின் சொல்லுக்கு எவ்வளவு சக்தி இருக்கிறதெண்டதை. தாயின் ஆசீர்வாதத்தோடு என்ன காரியத்தைச் செய்தாலும் அதில் நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்பது எனது நம்பிக்கை.

நான் திருமணம் முடித்து தனியாக வாழ்கின்றபோதும், அம்மா வீட்டுக்கு ஒரு நாளைக்குப் போகாவிட்டாலும் என்ர மனம் கஷ்ரப்படும்.

எனது வேண்டுகோள் என்னெண்டால் - பிள்ளைகளாகிய நாங்கள் பெற்றோர் குறிப்பாச் சொல்லுறதெண்டா அம்மாவின் மனம்கோணாமல் நடக்கவேணும் என்பதே.

**கந்தசாமி சிறிதரன்,**
**கொட்டடி**

அன்னையைத் தெய்வமாகத்தான் கருதுகிறம். ஏனெண்டால் - தகப்பன் வேலை செய்து பணத்தைக் கொண்டுவந்துதான் தருவார். ஆனா, அம்மா எங்களை அன்போட, கண்ணியமாகவும் வளர்க்கிறா.



மொத்தத்தில் தாய்தான் அனைத்தையும் செய்யிறா. அதாவது எங்களை பத்து மாதம் சுமந்து, பெத்து பாலூட்டி வளக்கிறா. அதால அம்மா மொத்தத்தில் கடவுள் மாதிரி.

**இராசதுரை குகன், சுன்னாகம்.**

தாய், எங்களுக்காண்டி எவ்வளவு கஸ்ரப்பட்டா. எங்களை முன்னேற்ற வேணும் என்றும், நாங்கள்



நல்ல ஒரு இடத்தில் இருக்கவேணும் என்றும் பாடுபடுகிறா. மற்றச் சகோதரங்கள் எல்லாரும் கொஞ்ச நாளுக்குத்தான் இருப்பாங்கள். தாய் நாங்கள் எவ்வளவு பிழைவிட்டாலும், எங்களின்ர பிழைகளைப் பொறுத்து, திருத்தி நல்வழிக்கு கொண்டுவரப் பாடுபடுவா. அவ எங்களைத் தண்டித்தாலும் தண்டிக்கிறது நல்லதுக்குத்தான். ஆகவே, அம்மா என்பவள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவர்.

**எஸ்.ஜெகன்,**
**யாழ்ப்பாணம்.**

அம்மாவின் அன்பு என்பது



அனைவருக்கும் உடனே தெரிகின்ற ஒன்றல்ல. எல்லாரும் புரிஞ்சுகொள்றது, தாங்கள் ஒரு அம்மா அப்பாவாக வருகின்றபோதுதான் எங்களை எங்கட அம்மா, எவ்வளவு கஸ்ரப்பட்டு வளர்த்திருக்கிறா என்பது தெரியவரும். இதேவேளை, ஒரு சிலர் தாய்மாரை ,முதியோர் இல்லத்தில் கொண்டுபோய் விடுகிறாங்கள். அவங்கள் தாய்ப்பாசம் அறியாதவர்.

**நவரெட்ணராஜா கோகலாம்பாள்,**
**பிள்ளையார் கோவிலடி,**
**யாழ்ப்பாணம்.**

அம்மாவைப் பொறுத்தவரையில் எங்களை வளர்த்து, படிக்கவைச்சு, நோய்நொடி நீக்கி, சீராட்டி, பாலூட்டி,



கல்வி கற்பிச்சு ஆளாக்கிவிட்ட எங்கள் தாயினை எந்நாளும் எவராலும் மறக்கமுடியாது.

**மனோகரன் திருச்செல்வி,**
**நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

அம்மா இல்லாமல், இந்த உலகத்தில் யார் என்ன செய்ய முடியும். அம்மாதான் எல்லாமே.



வீட்டுப் பொறுப்புக்களையும் சுமந்து, கணவனையும் கவனிச்சு, பிள்ளைகளையும் கவனிக்க எவ்வளவு பாடுபடுறா. எனவே, அம்மா சிறந்தவர்.

**செல்லத்துரை மனோன்மணி,**
**ஆவரங்கால்.**

தாயினைப்போல ஒரு கோயிலில்லை என்று கூறுவார்கள். தாய் ஒரு சிறந்த பணியை செய்கிறா. தகப்பன் இல்லாவிட்டாலும் தாய் முக்கியம். நாங்கள் இண்டைக்கு இந்த நிலையில இருக்கிறமெண்டால், தாய்தான் காரணம். தன்னை



யும் பொருட்படுத்தாது எம்மையெல்லாம் கொண்டிழுக்கும் தாய் போற்றப்பட வேண்டியவள்.

**நா.பாலசிங்கம்,**
**புளியங்கூடல்,**

தாயென்பவள் தெய்வம்தான்.



எங்களைப் பெத்து வளத்து உருவாக்கிவிட்டவள் தாய். எவ்வளவு கஷ்ரப்பட்டு எங்களை வளத்துவிட்டிருக்கிறா. அதால கடவுள் வடிவம் தாய்தான்.

**கே.மதிவேணி,**
**பருத்தித்துறை**

அம்மா என்பவா நிறையக் கஷ்ரப்பட்டு எங்கள வளத்திருக்கிறா. ஆனா, சில பேர் அப்படியான விஷயங்களைப் புரிஞ்சுகொள்ளுறேல. பொம்பிளயள் கல்யாணம் கட்டினாப்



பிறகு தாய்மாரைக் கவனிக்கிறது குறைவு. இதுக்கு என்ன காரணமோ தெரியாது. என்னப்பொறுத்த வரையில, நான் கல்யாணம் செய்தாப் பிறகும் அம்மாவை மறக்கமாட்டன்.

சந்திப்பு: எவ்.எக்ஸ்.சுதர்சன

## சிறு செய்திகள்

### பண்ணைப் பாலம் திருத்தம்

நீண்டகாலமாக பழுதடைந்த நிலையில் இருந்த தீவுப் பகுதிக்கான பிரதான வீதியில் அமைந்திருக்கும் பண்ணைப்பாலத்தின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன (53)

### குமுதினிப் படுகொலை ஆண்டு நினைவு

குமுதினிப் படகு பயணிகள் படுகொலையின் 18 ஆவது ஆண்டு நினைவு தினம் - எதிர்வரும் 15 ஆம் திகதி நெடுந்தீவில் மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

1985 இல் நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கு குமுதினிப் படகில் பயணித்தவர்களில் 33 பேர் கொடூரமான முறையில் கடற்படையால் கடலில் வைத்து வெட்டிக் கொலை செய்யப்பட்ட துயரச் சம்பவம் தெரிந்ததே. (113)

### வேலணையில் இந்து மாநாடு

இரண்டாவது இந்து மாநாட்டினை வேலணையிலும் சிறப்பிக்கும் முகமாக, வேலணை பிரதேச சபையினரின் ஏற்பாட்டில் கடந்த 9 ஆம் திகதி அன்று சிறப்பு நிகழ்வுகள், பிரதேசசபையின் செயலர் சண்முகராஜா தலைமையில் இடம்பெற்றன. (99)

### நபிகளின் உதய விழாவுக்கு ஏற்பாடு

நீண்ட இடைவெளிக்குப்பின்னர் யாழ்.முஸ்லிம் மக்கள் - உத்தம நபியின் உதயவிழாவினை வெகுவிமரிசையாகக் கொண்டாடுவதற்கான ஏறபாடுகளைச் செய்துவருகின்றனர்.(சு)

### நினைவுப் பேருரை

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில், நாளை மாலை 3 மணிக்கு சிவயோகர் சுவாமிகளின் ஞாபகார்த்த நினைவுப்பேருரையாக தமிழக பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜி.பாஸ்கரன் 'சைவ சித்தாந்தமும் இந்தியத் தத்துவமுறையும்' என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார்.


### பிரதேசசபை உப அலுவலகம் அரியாலையில்

நல்லூர் பிரதேச செயலகத்தின் உபஅலுவலகம், அரியாலை சரஸ்வதி நூல் நிலையத்தில் இன்று காலை 9 மணியளவில் திறக்கப்படவுள்ளது.

அரியாலை, மணியந்தோட்டம், பூம்புகார் ஆகிய பகுதி மக்களின் நலன் கருதியே, இந்த உப அலுவலகம் திறக்கப்படவிருக்கிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland


We believe the right people choose the right way
54A, Palaly road
Kantharmadam
கணனிக் கல்வியில் ஓர் உச்சாணி
புதிய பிரிவுகள் ஆரம்பம் 25-05-03
STP
T.P: 2222674 (சி-920)



2 ஆவது உலக இந்து பிராந்திய மாநாட்டுக்காக, யாழ்ப்பாணம் வருகைதந்த தமிழக அறிஞர்கள், நல்லை ஆதீனத்தின் வாயிலில் எடுத்துக்கொண்ட படம். (படம் - ராஜ்குமார்)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் 4000 கோடி ரூபா மீதமானது

## பாதுகாப்புச் செலவு குறித்து மத்தியவங்கி

(கொழும்பு)

கடந்த வருடம் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தால், அரசாங்கத்தின் பாதுகாப்புச் செலவினத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 4000 கோடி ரூபா மீதப்படுத்தப்பட்டுள்ளது என்று மத்திய வங்கியின் புதிய அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த வருடம் யுத்தச் செலவீனமாக 10 ஆயிரம் கோடி ரூபா அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டது. ஆனால், யுத்தம் நிகழாததினால் 4000 கோடி ரூபா மீதப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால், வரவு - செலவுத் திட்டப் பற்றாக்குறை நூற்றுக்கு 8.9 வீதத்தால் குறையுமென்றும், அரசாங்கம் செலுத்தவிருந்த வட்டிகள் கணிசமான அளவு குறைந்துள்ளது என்றும் மத்திய வங்கியின் அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

## வடக்கு - கிழக்கு உதைபந்தாட்டம்

# அரையிறுதி ஆட்டங்கள் இன்று கிளிநொச்சியில்!

(கிளிநொச்சி)

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டியில் - உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதிப் போட்டிகள், கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றன.

இதில் - மன்னார் அணி முல்லைத்தீவு அணியை 4 - 1 என்ற கோல்களாலும், திருமலை அணி அம்பாறை அணியை 1 - 0 என்ற கோல்களாலும், வவுனியா அணி கிளிநொச்சி அணியை 3 - 1 என்ற கோல்களாலும், மட்டக்களப்பு அணி யாழ்ப்பாணம் அணியைச் சமநிலை உடைப்பு மூலம் 4 - 3 என்ற கோல்களாலும் முறியடித்தன.

இன்று நடைபெறும் அரை இறுதிப் போட்டிகளுக்கு - மன்னார், திருமலை வவுனியா, மட்டக்களப்பு ஆகிய அணிகள் தெரிவுசெய்யப்பட்டன.

இதேவேளை, இன்று நடைபெறவுள்ள கபடிப் போட்டியின் இறுதிச் சுற்றில் - திருமலை, கிளிநொச்சி அணிகள் மோதுகின்றன.

# அரசு தேசிய லொத்தர் சபையை நோர்வேக்கு கொடுக்க திட்டமாம்

## ஜனாதிபதி செயலுக்கு காரணம் கூறப்படுகின்றது

(கொழும்பு)

ஜனாதிபதி நிதியத்தினை செயற்பாட்டு ரீதியாக முடக்குவதற்கான நடவடிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஈடுபட்டதனாலேயே, அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றுக் கொண்டதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

பொருளாதார, மறுசீரமைப்பு விஞ்ஞான தொழினுட்ப அமைச்சின் கீழ் செயற்பட்டுவந்த மேற்படி லொத்தர் சபையை - நோர்வே நாட்டிற்குக் குத்தகைக்குக் கொடுப்பது என அரசாங்கம் தீர்மானித்திருந்தது. ஜனாதிபதியின் நிதியத்திற்கு வரவேண்டிய பணத்தினை அரசாங்கம் முடக்குவதன் மூலம், ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்த முயன்றதாலேயே ஜனாதிபதி லொத்தர் சபையைப் பொறுப்பேற்றுள்ளார் என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை, எதிர்வரும் ஜூன் மாதம் அரசாங்கத்தினைக் கலைப்பதற்கு உத்தேசித்துள்ள ஜனாதிபதி - அதற்கான முன்னோடி நடவடிக்கையாகவே, லொத்தர் சபையைத் தன்னிச்சையாக தம்வசம் எடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### இராணுவப்....

தனக்குத் தகவல்களை தொழில்சார் ரீதியில் கையாளவேண்டும். இந்த முக்கியமான விடயத்தில் இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு தவறிவிட்டது.

அண்மைக்காலமாக கொல்லப்பட்டு வரும் புலனாய்வாளர்களின் கொலைச் சம்பவங்களில், விடுதலைப் புலிகள்தான் அவற்றைச் செய்தார்கள் என்பதற்கு எதுவித தடயங்களும் கிடைக்கவில்லை என்பதை- இவை தொடர்பாக, விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு கூறுகிறது என்றும் சிரேஷ்ட இராணுவப் புலனாய்வு உயரதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

# வஞ்சம் தீர்க்கும் நடவடிக்கையாக...

இராணுவத்தின் முன்னாள் உயர் அதிகாரி, "அடிபட்ட பாம்பு வஞ்சம் தீர்க்கும்" மனநிலையில் இருப்பது போன்ற நடவடிக்கையாகவே, இச் செயற்பாட்டினை எண்ணத் தூண்டுகின்றது.

அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்கும், மீள்குடியேற்றத்திற்கும் மிக நெருங்கிய தொடர்புடைய இவ்விடயத்தில், இராணுவத்தின் காவலரண்கள் அகற்றப்படவேண்டுமாயின், விடுதலைப் புலிகளின் காவலரண்களும் அகற்றப்பட வேண்டுமெனக் கூறுவது பொருத்தமற்றது.

ஏனெனில், இதுவரை காலமும் விடுதலைப் புலிகளின் காவலரண்கள் காரணமாக, மீள்குடியேற்ற நடவடிக்கைகள் எதுவும் தடைப்பட்டதில்லை. அத்தோடு - ஒரு விடுதலை அமைப்பான புலிகளின் நீண்ட தூரம் சென்று தாக்கக்கூடிய ஆயுத தளபாடங்கள் கண்காணிப்புக் குழுவின், அதுவும் - மேலதிகமாக இளைப்பாறிய வெளிநாட்டு இராணுவ அதிகாரிகளை உள்ளடக்கியுவர்களின் மேற்பார்வையில் இருக்க வேண்டுமென கூறுவது பொருத்தமற்றது.

எனவே, இடம்பெயர்ந்து அநாதைகளாக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் எதுவித அடிப்படை வசதிகளுமின்றி, அகதி முகாம்களே தஞ்சமென வாழும் இலங்கை மக்கள், மீண்டும் தங்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படவேண்டும் என்ற கருத்திற்கு - அவ்வதிகாரியின் அறிக்கையில், முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தும் இந்நடவடிக்கைக்கு அதியுயர் பாதுகாப்பு வலயம் அகற்றப் படவேண்டுமானால், எவ்வகையிலும் செயற்பாட்டிற்கு ஒவ்வாத சில நிபந்தனைகளை புலிகள் மீது சுமத்தி, அவரது ஆலோசனையை தெரிவித்திருப்பது, இன்றைய சூழ்நிலை மேலும் சிக்கலாகி - இன, மத, மொழி வேறுபாடின்றி அனைத்து மக்களாலும் எதிர்பார்க்கப்படுகின்ற சமாதானமும், மீள்குடியேற்றமும் மேலும் பின்னடைவை ஏற்படுத்தும் என்பதனை தெரிவிக்கிறோம்.

இவ்வாறான குந்தகம் ஏற்படுத்தும் நம்பியாரின் ஆலோசனையை எமது ஒன்றியம் வன்மையாகக் கண்டிப்பதுடன், தங்களின் தலைமையின் கீழிருக்கும் இவ் அரசாங்கத்தில், இவ்வாறானவர்களின் தலையீட்டினைத் தவிர்த்து, எமது நாட்டின் சமாதானத்திற்கான முயற்சிகளை மேலும் சிறப்பானதாக முன்னெடுக்க, தாங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கையினை மேற்கொள்வீர்கள் என எமது ஒன்றியம் வேண்டுகோள் விடுக்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஜனாதிபதியின்..

தகவல் தெரிவிக்கிறது.

அரசாங்க அச்சகத் திணைக்களத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக, சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட முடியவில்லை. இத்தகைய சூழ்நிலையில் ஜனாதிபதியின் உத்தரவு செல்லுபடியற்றதாக உள்ளதென்றும், அபிவிருத்தி லொத்தர் சபை, தொடர்ந்தும் அமைச்சர் மிலிந்தவின் அமைச்சின் கீழ் செயற்படக்கூடிய அதிகாரத்தைக் கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

### சதீஷ்...

கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டதற்கு இணங்க, கிட்டத்தட்ட அந்த அடிப்படையில் அவர் கருத்தில் கொண்டிருப்பது இந்த அறிக்கையில் தெரிகிறது என்றார்.

புலிகளும் அரசும் இந்த அறிக்கை தொடர்பான சாதக, பாதகங்களை பேசித் தெளிவுபடுத்த வேண்டும். புலிகளின் நிலைகள் - பாதுகாப்பு வலயங்களுக்கு அருகிலில்லை என்பது குறிப்பிடத்தக்கது என்றும் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

"நாளைய எதிர்காலத்தை இன்றே தீர்மானியுங்கள்"
Hello Student's
2003 A/L பரீட்சையை முடித்துவிட்ட உங்களுக்கு ஒரு பொன்னான வாய்ப்பு.
கணக்கியல் உலகில் அங்கீகரிக்கப்பட்ட aat கற்கை நெறியூடாக நீங்களும் ஒரு உயர் தொழில்சார் வல்லுநராகி சிறந்த வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ள நாம் வழிகாட்டுகின்றோம்.
Our special offer for A/L 2003 Student's
100% FREE
(A/L பரீட்சை பெறுபேறுகள் கிடைக்கும் வரை)
மேலதிக விபரங்களுக்கு:- CAREER.COM INSTITUTE
No.79, MAIN ST., JAFFNA
அலுவலக நேரம: தினமும் காலை 9.00 am - 2.00 pm
Note: தங்கள் பதிவுகள் 25.05.2003 முன்னர் மேற்கொள்ளவும்.
aat விரிவுரைகள் தமிழ், ஆங்கில மொழி மூலம் நடைபெறும்.

(சி-915)

எமக்கு நல்லாதரவு தரும் எமது வாடிக்கையாளர்களுக்கு மனமுவந்த நன்றி
இரண்டாவது ஆண்டு நிறைவுடன்
இன்று மூன்றாவது ஆண்டு நோக்கி......
ஆசீர் வணிக நிலையம்
202A, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
யாழ் மாவட்ட அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள்
★ சிலோன் பென்சில் கம்பனி லிமிட்டட்
★ அற்லஸ் பிளாஸ்ரிக் பிறைவேட் லிமிட்டட் -பெகிலியகொட
★ தேசிய கடதாசிக் கம்பனி லிமிட்டட் - கொழும்பு
★ றிச்சேட் றேடிங் கொம்பனி லிமிட்டட் - குருநாகல்
★ அர்ச்சனா ஸ்கிறீன் பிறின்ட் நிறுவனம் - திருவனந்தபுரம், இந்தியா
(சி-908)


திருநெல்வேலி
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
2ம் உலக இந்து மாநாட்டை முன்னிட்டு
விசேஷ அபிஷேக ஆராதனை
2 ஆம் உலக இந்து மாநாட்டை முன்னிட்டு திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் விசேஷ அபிஷேகமும், கூட்டுப் பிரார்த்தனையும், சமய சொற்பொழிவுகளும் இடம்பெறும்.
நிர்வாக சபை,
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்
தேவஸ்தானம்,
திருநெல்வேலி.
(சி-921)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.05.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.